3-5-1952 M.Y.M BANGHLORE 2
M

# போர்வாள்

வாள் 5 வீச்சு 31

3-5-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

மா. இளஞ்செழியன் B A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2

# சம்பளம் உயர்கிறது!

சம்பளம் உயர்கிறது!

உண்மையாகவே உயர்கிறது!

ஆனால் இங்கே அல்ல—பம்பாயில்!

இங்கேயும் உயரக்கூடும்!

இங்கே உயர்கிறதா, இல்லையா, உயர்வதானால் எந்த அளவு உயர்கிறது என்பதெல்லாம் இன்னும் ஒரு பத்து நாட்களுக்குள் தெளிவாகத் தெரிந்துவிடும்.

ஆனால், இப்போது, பம்பாய் மாகாணத்தில், சம்பளம் உயர்ந்துவிட்டது என்பது மட்டும் உண்மை.

யாருடைய சம்பளம் உயர்ந்துவிட்டது பம்பாயில்?

மில் தொழிலாளர்களுடைய சம்பளமா—இல்லை.

அரசியலார் அலுவலகங்களில் பணியாற்றும் ஏழை குமஸ்தாக்களின் சம்பளமா?—இல்லை.

ஆரம்ப ஆசிரியர்களின் சம்பளமா—அதுகூட இல்லை.

ஏழை போலீஸ் கான்ஸ்டேபில்கள், சர்க்கார் பியூன்கள், தபால் சேவகர்கள், இப்படிப்பட்டவர்களுடைய சம்பளமா உயர்ந்திருக்கிறது—கிடையாது, கிடையாது.

அப்படியானால், யாருடைய சம்பளம்தான் உயர்ந்திருக்கிறது என்று கேட்கிறீர்களா?

மந்திரிகளுடைய சம்பளம்!

இதுவரை பம்பாய் மாகாணத்தை ஆட்சிபுரிந்து வந்த காங்கிரஸ் மந்திரிகள் மாதம் ஒன்றுக்கு அசல் சம்பளம் என்ற பெயரில் ரூ. 850, கார் அலவன்ஸ் என்ற பெயரில் ரூ. 200 ஆகமொத்தம் ரூ. 1050 மொத்த சம்பளமாகப் பெற்று வந்தார்கள்.

அது போதவில்லையாம் அவர்களுக்கு!

எப்படிப் போதும்?

அவர்கள்தான் தியாகமூர்த்திகளாயிற்றே! தியாகத்தின் சிகரங்களுக்கு மாதம் ரூ ஆயிரத்து ஐம்பது போது?

இன்னமும் சற்று அதிக சம்பளம் இருந்தால் தானே அவர்களால் அசல் தியாக வாழ்வு வாழ முடியும்?

ஆகவே, அடுத்த மாதம்முதல் அவர்கள், தங்களுடைய மாத சம்பளத்தை 1600 ரூபாயாக உயர்த்திக் கொள்ளத் தீர்மானித்துவிட்டார்கள்.

இந்த ஆயிரத்து அறுநூறு ரூபாய்களையும் அசல் சம்பளம் என்கிற பெயரால் வாங்கிக் கொள்ள மாட்டார்கள்.

ரூ. 1100-க்கு சம்பளம் என்று பெயர்!

ரூ. 250-க்கு கார் அலவன்ஸ் என்று பெயர்!

மற்றொரு 250-க்கு வீட்டு அலவன்ஸ் என்று பெயர்!

ஆயிரத்து அறுநூறு ரூபாய்களையும் சம்பளம் என்கிற பெயரால் வாங்கிக் கொண்டால் பொதுமக்கள் எங்கே மூர்ச்சை போட்டு விழுந்துவிடுவார்களோ என்று எண்ணியோ என்னவோ இந்தக் காங்கிரஸ் காருண்ய மூர்த்திகள் வெவ்வேறு பெயர் கொடுத்திருக்கிறார்கள் தங்களுடைய சம்பளப் பணத்திற்கு!

ஆயிரமாக இருந்தது ஆயிரத்து அறுநூறு ஆக்கப்பட்டுவிட்டது.

இது என்ன அக்கிரமம்! சர்க்கார் குமாஸ்தாக்கள் தங்களுடைய சம்பளத்தை உயர்த்தும்படி கேட்கிறபோது மட்டும் பணமில்லை என்கிற பஞ்சப்பாட்டைப் பாடுகிற காங்கிரஸ் மந்திரிகள், தங்களுடைய சம்பளத்தை மட்டும் இப்படி மனம் போனபடி உயர்த்திக் கொள்

(15-ம் பக்கம் பார்க்க)

# நாங்கள் சொன்னோம்! அவரும் சொல்கிறார்!

## தேசியத் தோழரே, நீர் என்ன சொல்கிறீர்?

★

"பொதுமக்கள்மீது அவர்கள் விரும்பாத ஒரு மொழியை வலுக்கட்டாயமாகத் திணிக்க நாம் முயல்வோமானால், அந்த முயற்சியின் விளைவாக, நாட்டிலே தீராத பகைமையும் வெறுப்புமே தாண்டவமாடத் தொடங்கிவிடும். ஆகையால்தான் நான், ஹிந்தி மொழியை நாடெங்கும் பரப்ப வேண்டும் என்கிற ஆவல் படைத்துள்ள அனைவரையும் பார்த்துக் கூறுகிறேன்: தங்கள்மீது ஹிந்திமொழி பலவந்தமாகத் திணிக்கப்படுகிறது என்கிற எண்ணம் பொதுமக்களுக்குத் துளியளவும் ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ளுங்கள். ஹிந்திமொழியைக் கற்றுத்தானாகவேண்டும் என்று பொதுமக்களைக் கட்டாயப்படுத்தாதீர்கள்."

"திராவிடத் தென்றல் அறிஞர் அண்ணா அவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்ட காலத்தில் ஆற்றிய அரிய விரிவுரைகளில் ஒரு பகுதி அல்லவா மேலே உள்ள வாசகங்கள்? இந்த வாசகங்களை இப்பொழுது எடுத்து "போர்வாள்" இதழில் போடுவானேன்?" என்று வாசகர்கள் பலர் கேட்கக்கூடும் மேலே நாம் தந்துள்ள வாசகங்களைக் கண்ணுற்றதும்.

ஆனால் இந்த வாசகங்களை வீசியிருப்பவர் தென்னாட்டுப் பெர்னாட்ஷா அல்ல.

ஓஹோ! அப்படியா சங்கதி! அப்படியானால் இந்தச் சொற்களை அளித்திருப்பவர், திராவிடர் கழகத் தலைவர் பெரியார் இராமசாமியாகத்தான் இருக்கும் என்று நீங்கள் கூறக்கூடும்.

ஆனால் உண்மை, அப்படியும் இல்லை! இந்தக் கருத்துரையைக் கனிவுடன் அளித்திருப்பவர் பெரியார் இராமசாமியும் அல்ல.

அறிஞர் அண்ணாவோ, பெரியார் இராமசாமியோ, திராவிட முன்னேற்றக் கழகத்தினர்களோ, திராவிடர் கழகத் தோழர்களோ பேசிய பேச்சல்ல இது.

இந்த வாசகத்தை வீசியிருப்பவர் ஒரு காங்கிரஸ்காரர்! அன்னை பாரதமாதாவின் அருமந்த புத்திரர்!

சாதாரண காங்கிரஸ்காரரல்ல அவர். காங்கிரஸ் மகாசபையின் அருப்பெரும் தலைவர்களிலே ஒருவர்.

மழைக்காலம் வந்ததும் முளைக்கும் காளானைப்போல, காங்கிரஸ் கட்சி அதிகாரபீடத்தைக் கைப்பற்றிவிட்ட காரணத்தால் தன்னையும் ஒரு காங்கிரஸ்காரன் என்று சொல்லிக்கொள்ளும் திடீர் தேசபக்தர்களில் ஒருவர் அல்ல அந்த வாசகங்களை வீசியிருப்பவர். சென்ற முப்பது ஆண்டுகளாகக் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் அரும்பாடுபட்டு வந்திருப்பவர்.

அவர் ஒரு நீண்டகால காங்கிரஸ் தலைவர் என்பது மட்டுமல்ல உண்மை. பண்டித ஜவகர்லாலின் மத்திய மந்திரி சபையில் ஓர் அமைச்சராக மூன்று மாத காலத்திற்குமுன் வரையில் ஜொலித்துக் கொண்டிருந்த ஒரு மாணிக்கமும் ஆகும் அவர்.

முன்னே அமைச்சராக இருந்தவர் இப்போது என்ன செய்கிறார் என்று கேட்கிறீர்களா?

பெருமை பொருந்திய ஒரு மாகாணத்தின் அருமை பொருந்திய கவர்னராகக் கொலுவீற்றிருக்கிறார்!

எந்த மாகாணத்தின் கவர்னராக இருக்கிறார் அவர்? விந்திய பிரதேசத்துக்கா? மத்திய பிரதேசத்திற்கா? பம்பாய் மாகாணத்திற்கா? வங்காள மாகாணத்திற்கா? என்று கேட்கிறீர்களா? வேறு எந்த மாகாணத்திற்கும் அல்ல, சென்னை மாகாணத்திற்குத்தான் கவர்னராக இருக்கிறார் அவர்!

யார்? ஸ்ரீஜத் ஸ்ரீ பிரகாசாவா இப்படித் திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்? மெய்யாகவா? என்று கேட்கத் தோன்றும் உங்களுக்கு!

ஆச்சரியம் ஆனால் உண்மை!

நம்பமுடியாத சம்பவம், ஆனால் நடந்துதான் இருக்கிறது!

ஸ்ரீமான் ஸ்ரீபிரகாசாதான் சீலம் மிகுந்த இந்தச் சொற்களைச் சந்தோஷத்துடன் வீசியிருப்பவர்!

விருப்பமில்லாத மக்கள்மீது இந்திமொழியைக் கட்டாயபடமாகத் திணிக்கக்கூடாது என்கிற நற்கருத்தைத் தைரியமாக, திட்டவட்டமாக, தெள்ளத் தெளிவாக எடுத்துப் பேசியிருப்பவர், சென்னை மாகாணத்தின் காங்கிரஸ் கவர்னர் ஸ்ரீபிரகாசாதான்! ஸ்ரீபிரகாசாவேதான்!

ஏப்ரல் 26-ஆம் நாளன்று, சென்னை தியாகராய நகரில், தட்சிண பாரத ஹிந்தி பிரசார சபாவில், அந்த சபாவினால் நடத்தப்பட்ட ஹிந்திப் பரீட்சைகளில் தேறிய பட்டதாரிகளுக்கு ஹிந்திப் பட்டங்களை வழங்குவதற்காக ஒரு பட்டமளிப்பு விழா நடத்தப்பட்டிருக்கிறது.

அந்த விழாவிலே கலந்து கொண்டு, பட்டமளிப்பு விழாப் பிரசங்கத்தை நிகழ்த்தியிருக்கிறார் சென்னை மாகாண கவர்னர்.

அங்கே அவர் ஆற்றியிருக்கிற அந்தச் சொற்பொழிவிலேதான் நாம் இக் கட்டுரைத் தொடக்கத்தில் தந்துள்ள கருத்துக்கள் காணப்படுகின்றன,

"கட்டாய இந்தி கூடாது"

"இந்தி மொழியைக் கட்டாய மொழியாக ஆக்குவதன்மூலம் அந்த மொழியைப் பரப்புவது இயலாத செயல்,"

"கட்டாய மொழியாக எந்த மொழியைத் திணிக்க முயன்றாலும் பொது மக்களிடத்திலே தீராத வெறுப்பையே நாம் நிச்சயமாக உண்டாக்கிவிடுவோம்."

"இந்திமொழியைப் பரப்ப முயல்வோரே! ஒரு வார்த்தை! உங்கள் முயற்சிகளில் பலவந்தம் என்பது துளியளவும் இருக்கக்கூடாது."

காங்கிரஸ் கவர்னர் ஸ்ரீபிரகாசா இப்போது இப்படியெலலாம் பேசியிருக்கிறார்.

இவர் இப்படிப் பேசியிருப்பது மட்டுமல்ல ஆச்சரியம், இப்படிப்பட்ட சொற்பொழிவை மூந்திரிக் கொட்டை அளவுள்ள பெரிய எழுத்துக்களில் மகத்தான மகிழ்ச்சியுடன் வெளியிட்டிருக்கின்றன தேசிய ஏடுகள்.

ஆனால் இதே கருத்துக்களை நாட்டிலே எடுத்துக்கூறியகாரணத்துக்காக, நாம், நாம் என்றால் திராவிட இயக்கத் தோழர்கள், எவ்வளவு அதிகமாக ஏசப்பட்டிருக்கிறோம்!

"கட்டாய இந்தி ஒழிக! எந்த மொழியையும் பலவந்தமாகத் திணிக்கும் முயற்சி அழிக!" என்கிற வீரமுழக்கத்தை இன்றைய தினம், கவர்னர், ஹிந்தி பிரசார சபையின் பட்டமளிப்பு விழாவிலேயே பேசியிருக்கிறார்—அப்படிப் பேசியிருப்பதற்காகப் பாராட்டவும்படுகிறார் பாரதபுத்திரர்களால்!

ஆனால் இதே வாசகங்களை நாம் பேசியபோது......?

தேசியத் தீரர்கள் வீசிய கேலி மொழிகள் என்ன கொஞ்சமா?

"தேசத்துரோகிகள்!"

"நாட்டைக் காட்டிக் கொடுக்கும் நாசகாலர்கள்!"

"நயவஞ்சகர்கள்!"

"நல்ல உள்ளம் அற்றவர்கள்"

"நச்சுநினைப்புக் கொண்டவர்கள்"

என்று இப்படியெல்லாம் அல்லவா நாம் தூற்றப்பட்டோம் இன்று கவர்னர் பேசுகிற இதே பேச்சைப் பேசிய குற்றத்திற்காக!

தூற்றப்பட்டது மட்டுமா? கல்லால் அடிக்கப்பட்டிருக்கிறோம்! தடியால் நொறுக்கப்பட்டிருக்கிறோம்! சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறோம்! கடுங்காவலும் விதிக்கப்பட்டிருக்கிறோம்!

ஆச்சாரியார் முன்னமோர்முறை முதன் மந்திரியாக இருந்தபோது, ஆயிரத்துக்கு மேற்பட்ட அருந் தமிழர்களை வெஞ்சிறைக்குள் தள்ளி வாட்டி வதைத்தது, அவர்களெல்லாம் கட்டாய இந்தியை எதிர்த்துப் பேசினார்கள் என்கிற காரணத்திற்காகத்தானே!

கட்டாய இந்தியை எதிர்க்கிறார்கள் என்கிற ஒரே ஒரு காரணத்திற்காகத்தானே, ஆச்சாரியார், அக்கக் காலத்தில், பெரியார் இராமசாமியைப் பெல்லாரிச் சிறையில் போட்டு வாட்டினார்!

அதே காரணத்திற்காகத்தானே, அவர், அறிஞர் அண்ணாதுரையை, 1940-ல், சென்னைச் சிறையில் நான்கு மாத காலம் அடைத்து வைத்திருந்தார்!

அந்தக் காரணத்தை முன்னிட்டுத்தானே அவர் டாக்டர் தருமாம்பாள், மலர்முகத் தம்மையார், போன்ற வயது முதிர்ந்த அன்னைமார்களையுங்கூடக் கடுஞ்சிறைக்குள் தள்ளி, சோளக்கஞ்சியையும் புழுநெளியும் குழம்பையும் குடியுங்கள் என்று கூறினார்!

அதே காரணத்திற்காகத்தானே, நம் பத்திரிகைகளுக்கு 2000, 3000, என்று ஜாமீன் கேட்டார்!

அந்த ஒரு காரணத்திற்காகத்தானே நம் அருமைக் கண்மணிகள் போன்ற தாளமுத்து, நடராசன், இருவரும் மரணத்தை அணைத்துக் கொண்டார்கள் 1940—41-ம் ஆண்டுகளில்!

இன்று கவர்னர் பேசுகிறார் அன்று நாம் பேசியதை!

அவரோ போற்றப்படுகிறார்—நாமோ தூற்றப்படுகிறோம்.

ஏன் இந்த வித்தியாசம்? எதற்காக இந்த ஓரவஞ்சனை?

கவர்னர் பேசினால் கொட்டை எழுத்துக்களிலே விளம்பரம்!

அதையே நாம் பேசினால் ஆறுமாத கடுங்காவல்!

ஏன் இந்த ஒரு குலத்துக்கொரு நீதி?

தேசிய வாதிகளைக் கேட்கிறோம்—சிந்திக்கும் பண்பை இன்னமும் மறந்துவிடாமல் இருக்கும் தேசிய வாதிகளை மட்டும்தான் குறிப்பிடுகிறோம்—மற்றவர்களை அல்ல—ஏன் இந்த வேறுபாடு?

கவர்னர் இன்று பேசுகிற இதே பேச்சைத்தான் அன்று நாங்கள் பேசினோம்—எங்களை மட்டும் தடியால் அடித்தீர்களே, ஏன்?

எங்களை மட்டும் சிறைச்சாலைக்குள் தள்ளினீர்களே, எதற்காக?

எங்களை மட்டும் ஓயாமல் தூற்றினீர்களே, அது எந்த வகையில் நியாயம்?

சொல்லுங்கள் தேசியவாதிகளே மனம் திறந்து சொல்லுங்கள்.

கவர்னருக்கு ஒரு நீதி—எங்களுக்கு மற்றொரு நீதியா?

ஸ்ரீ பிரகாசாவுக்கு ஒரு சட்டம்—தோழர் அண்ணாதுரைக்கு மற்றோர் சட்டமா?

என்ன காரணமப்பா தேசியத் தம்பி, எது காரணம் உங்களின் இந்த இருவகை நடத்தைக்கு?

"கட்டாய இந்தி கூடாது"—நாங்கள் கூறினோம்.

இதோ கவர்னரும் கூறுகிறார்.

எங்களைத் தூற்றினீர்கள்—அவரைப் போற்றுகிறீர்கள்.

எங்களைக் கேலி பேசினீர்கள்—அவருக்கு 'லாலி' பாடுகிறீர்கள்.

எங்களைத் தேசத் துரோகிகள் என்கிறீர்கள்—அவரைத் தேசபக்தர்களின் தலைவர் என்கிறீர்கள்.

எங்களுக்குச் சிறை, தடியடி, கடுங்காவல் இவற்றைப் பரிசுகளாகத் தந்தீர்கள்—அவருக்கோ, மலர்மாலை, புன்சிரிப்பு, ஜே கோஷம், இவைகளையெல்லாம் காணிக்கைகளாக அளித்திருக்கிறீர்கள்.

ஆனால் ஒன்று.

எந்தக் கருத்தை நாங்கள், உங்களுடைய கல்லடிகளுக்கும் சொல்லடிகளுக்கும் நடுவேயிருந்து

(6-ம் பக்கம் பார்க்க)

# கேரள கீதம்!

வடநாடு சுரண்டுகிறது— தென்னாடு சுரண்டப்படுகிறது.

வடநாடு கட்டளையிடுகிறது— தென்னாடு குற்றேவல் புரிகிறது.

வடநாடு சவாரி செய்கிறது— தென்னாடு சவாரியை இழுக்கிறது.

வடநாடு முதலாளிபோல் ஆதிக்கம் செலுத்துகிறது— தென்னாடு தொழிலாளிபோல் அடங்கிக் கிடக்கிறது.

வடநாடு கொழுக்கிறது— தென்னாடு மெலிகிறது.

வடநாடு தென்னாட்டை ஆட்டிப் படைக்கிறது. தென்னாடு, வடநாட்டிற்கு அடங்கிக் கிடக்கிறது.

இந்தியத் துணைக் கண்டத்தில் காணப்படும் கொடுமையான காட்சிகளிலெல்லாம் மிகவும் கொடுமையான காட்சி இது.

கதைகளிலெல்லாம் மிகவும் கோரமான கதை இது.

வெள்ளை ஏகாதிபத்யம் வெளியேறி விட்டது. ஆனால் அது இருந்த இடத்தில் இப்போது வடநாட்டு ஏகாதிபத்யம் வந்து குடி புகுந்து விட்டது

ஒயிட் ஹால் இருந்த இடத்தில் இன்று அலகாபாத் இருக்கிறது,

லண்டன் செலுத்திய ஆதிக்கத்தை இன்று டில்லி செலுத்துகிறது,

ஆங்கிலம் நடத்திய ஏகாதிபத்யத்தை இன்று ஹிந்தி நடத்துகிறது.

மாஞ்சஸ்டரும் லங்காஷயரும் அன்று நடத்திவந்த வியாபாரச் சுரண்டலை இன்று பம்பாயும் கல்கத்தாவும் நடத்தி வருகின்றன.

அரசியல்
பொருளியல்
வணிக இயல்
மத இயல்
பத்திரிகை இயல்

எல்லாத் துறைகளும் இன்று வட இந்தியர்களின் ஏகபோக உரிமைகளாக ஆகிவிட்டன.

புதிய புதிய தொழிற்சாலைகள் யாவும் வட இந்தியாவிலே துவக்கப்படுகின்றன.

பெரிய பெரிய அணைக்கட்டுத் திட்டங்கள் எல்லாம் வட இந்தியாவுக்கென்றே தீட்டப் படுகின்றன.

இந்தியத் துணைக்கண்டத்தை ஆட்டிப் படைக்கும் அரசியல் அதிகாரக் கயிறு வட இந்தியர்களிடமே தரப்பட்டுவிட்டது.

பட்டணமாகி விட்டது வட இந்தியா, பட்டிக்காடாக்கப் பட்டு விட்டது தென்னிந்தியா.

உணவுத் துறையிலேகூட வட இந்தியா, தன்னுடைய கோதுமையையே தென்னிந்தியர்கள் உண்டு தீரவேண்டும் என்கிற நிலையை எப்படியோ உருவாக்கி விட்டது.

ஹிந்தி ஏகாதிபத்யம்—
மொழித் துறையில்.
டில்லி ஏகாதிபத்யம்—
அரசியல் உலகில்.
கோதுமை ஏகாதிபத்யம்—
உணவுப் பிரச்சினையில்.
டாடா பிர்லா ஏகாதிபத்யம்-
முதலாளித்வ வட்டாரத்தில்
ஜவகர் ஏகாதிபத்யம்—காங்கிரஸ் இயக்கத்தில்.

இப்படி எந்தத் துறையைப் பார்த்தாலும் வட இந்திய ஆதிக்கம் தலைவிரித்தாடுகிறது.

இந்த வட இந்திய ஏகாதிபத்யத்தை எதிர்த்து முதல் முதல் புரட்சிக் கொடி உயர்த்திய பெருமை தமிழ் நாட்டுக்கே உண்டு.

வட இந்திய ஏகாதிபத்யமே-நிறுத்து உன் சுரண்டலை என்று முதல் முதல் முழக்கமிட்டவர்கள் தமிழ் மக்கள்தான்.

வட இந்தியச் சிறையிலிருந்து தென்னிந்தியாவை விடுதலை செய்வதற்காக வென்றே திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடர் கழகம் என்கிற இரண்டு அரசியல் கட்சிகளை நடத்தி வரும் நாடு தமிழ்நாடுதான்.

டில்லிக்கும் சென்னைக்குமிடையே அரசியல் திட்டம் என்கிற கதர் நூலால் ஒரு 'முடி' போட்டிருக்கிறார்களே தேசியத் தம்பிகள் அந்த முடியை அறுத்தெறிய வேண்டும் என்கிற உன்னத உணர்ச்சியை நாட்டிலே வளர வைத்தவர்கள் தமிழ்ப் பெருமக்கள் தான்.

திராவிடநாடு திராவிடருக்கே என்கிற இலட்சிய கீதத்தை எழுப்பி, அமைத்தே தீருவோம் திராவிடத் தனியரசு என்கிற உறுதியுரையைப் புகன்றவர்கள் தமிழர்கள் தான்.

ஆந்திரர்கள் ஆதரித்தார்களா, மலையாளிகள்-மனம் ஒப்பினார்களா, கன்னடர்கள் காது கொடுத்தார்களா என்பதையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்த்துக் காலத்தை வீணாக்கிக் கொண்டிருக்கவில்லை தமிழன்.

ஆந்திரர்கள், கேரளர்கள், கன்னடர்கள் ஆகியதன் மூன்று சகோதரர்களுக்கும் சேர்த்து தமிழனே புரட்சிக் குரல் எழுப்பத் தொடங்கினான். வட இந்திய ஏகாதிபத்யத்தை எதிர்த்து ஓயாமல் பணி புரிய ஆரம்பித்தான்.

ஏறத்தாழ பத்து ஆண்டுகளாக, தமிழ்நாடு, வடநாட்டின் இரும்புப் பிடியிலிருந்து தென்னாட்டை விடுவிக்க வேண்டும் என்கிற உயர்ந்த இலட்சியத்தையே தன்னுடைய சிறந்த குறிக்கோளாகக் கொண்டு நற்பணி ஆற்றி வருகிறது.

அந்த ஓயாத பணியின் விளைவாக, இப்போதுதான், ஆந்திரம்-கேரளம்-கன்னடம் முதலிய தென்னாட்டின் பிற பகுதிகளிலும் வட இந்திய ஏகாதிபத்யத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்கிற வீர உணர்ச்சி தோன்றி வளரத் தொடங்கியிருக்கிறது.

அந்த உணர்ச்சியின் வேகம் அங்கெல்லாம் மிகவும் குறைவுதான்.

உணர்ச்சி ஆரம்பமாவது இப்போதுதான்.

உணர்ச்சி பரவியுள்ள அளவும் பகுதியும் சிறிதுதான்.

நாம் மறுக்கவில்லை.

ஆனால் உணர்ச்சி உருவாகத் தொடங்கிவிட்டது. அதை மட்டும்தான் நாம் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறோம்.

அளவிலும் வேகத்திலும் தரத்திலும், ஆந்திர—கேரள—கன்னடப் பகுதிகளில் அரும்பியுள்ள வட இந்திய ஏகாதிபத்ய எதிர்ப்பு உணர்ச்சி இப்போது குறைவாக இருக்கலாம். ஆனால் அது நாளாக ஆக வளர்ந்தே தீரும். காணாத கண்களையும் காணச் செய்யும் அளவுக்கு வளர்ந்தே தீரும்.

ஏனெனில் அந்த உணர்ச்சி நியாயத்தின் அடிப்படையில் பிறப்பது, ஜனநாயகத்தின் மடியில் தவழ்வது.

நியாய பலமும் அந்த உணர்ச்சிக்கு ஏராளமாக இருக்கும் காரணத்தால் அந்த உணர்ச்சி, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இல்லாவிட்டாலும், மெள்ள மெள்ள, ஆனால் நிச்சயமாக, வளர்ச்சி பெற்றே தீரும்.

கன்னட நாட்டில் வட இந்திய எதிர்ப்புப் புயல் எழுந்தது சில மாதங்களுக்கு முன்பு.

பார்த்தோம் நாம்.

கன்னட நாட்டின் ஒரு பகுதியாகிய மைசூர் இராஜ்யத்தில் அந்த இராஜ்யக் குடிமகனாகிய எல். எஸ். ராஜு அய்யர் என்கிற ஓர் வழக்கறிஞர், அந்த இராஜ்யத்தின் தலைமைநீதிமன்ற நீதிபதியாக மேடப்பா என்பவரைக் கொலை செய்ய முயன்றதாக ஓர் வழக்கு இருந்து வந்தது.

அந்த மைசூர் இராஜ்யத்து வழக்கை, மைசூர் இராஜ்யத்தைத் தவிர்த்த வேறு ஏதாவது ஒரு இராஜயத்தில்தான் விசாரித்ததாக வேண்டும், இதற்கு மைசூர் இராஜயம் தலைவணங்கியாகவேண்டும் என்று, டில்லி, கட்டளை பிறப்பித்தது குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் மூலம்.

இந்தக் கட்டளைக்கு அடிபணியமுடியாது என்று தலைநிமிர்ந்து கூறிவிட்டது மைசூர்.

டில்லி நம் உள் விவகாரத்தில் தலையிடுவது—அதைக் கண்டும் நாம் மானமின்றிக் கிடப்பதா—இல்லை—முடியாது என்று புரட்சிக் குரல் எழுப்பிற்று மைசூர் சட்டசபை.

மைசூர் இராஜ்யத்து வழக்கு ஒன்றை வேறு இராஜ்யத்தில் விசாரிப்பதா—அது எங்கள் இராஜ்யத்தின் தன்மானத்திற்கேயல்லவா இழுக்கை உண்டாக்கும்—ஆகவே, டில்லியே, உன் தாக்கீதுக்குத் தலைவணங்கமாட்டோம் என்று தைரியமாகக் கூறிவிட்டனர் மைசூர் ராஜ்யத்தின் அன்றைய முதமைச்சர் தோழர் கே. சி. ரெட்டியும், அன்றைய சட்ட அமைச்சர் தோழர் பாஷ்யமும்.

கடைசியில் டில்லி தலைவணங்கிற்று.

மைசூர் ராஜ்ய வழக்கை மைசூரிலேயே நடத்திக்கொள்ள ஒப்புதல் தெரிவித்துவிட்டது.

டில்லி தோற்றது—மைசூர்வென்றது.

டில்லியின் கட்டளையை எதிர்த்துப் போராடி வெற்றுபெற்று அந்தக் கட்டளையை ஒரு செல்லாக் காசாக்கிவிட்டது மைசூர்.

வட இந்திய ஏகாதிபத்யத்தை எதிர்த்து கன்னடநாடு தொடுத்த எதிர்ப்புப் போராட்டம் அது வேகமாக வளர்ந்துவரும் வடநாட்டு ஆதிக்கத்தை இனியும் சகித்துக்கொண்டிருக்க முடியாது என்பதை அழுத்தந் திருத்தமாகக் கன்னடத் திருநாட்டினர் எடுத்துக் கூறிய இனிய நிகழ்ச்சி அது.

இன்றைய தினம் கேரளம், அன்றைய தினம் கன்னடநாடு அளித்ததைப் போன்றதோர் இனிமைமிகு செய்தியை நமக்கெல்லாம் தந்திருக்கிறது.

திருவிதாங்கூர்—கொச்சி இராஜ்யம், கேரள நாட்டின் ஒரு பகுதி.

அந்த இராஜ்யத்துப் பொதுமக்கள் அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சியைப் படுதோல்வி அடையச் செய்திருக்கின்றனர்.

அந்த இராஜ்யத்துசட்டசபைக்கு மொத்தமுள்ள 108 ஸ்தானங்களில் 44 ஸ்தானங்களைத்தான் காங்கிரஸ் கட்சியால் கைப்பற்ற முடிந்தது.

மிச்சமுள்ள 64 ஸ்தானங்களையும் காங்கிரசல்லாதார் கைப்பற்றிவிட்டனர்.

காங்கிரஸ் கட்சி அங்கே படுதோல்வி அடைந்திருந்தும், கேவலம் 44 ஸ்தானங்களை மட்டுமே அந்தக் கட்சியால் கைப்பற்ற முடிந்திருந்தும், ஒரு சாதாரண மைனாரிட்டி கட்சி என்கிற நிலையையே அந்தக் கட்சி பெற்றிருந்தும், ஏதேதோ தில்லுமுல்லுகளை கையாண்டு, என்னென்னவோ திருட்டும் புரட்டும் செய்து, எப்படியோ ஆட்சிப் பீடத்தில் ஏறி அமர்ந்துவிட்டது அந்தக் கட்சி'

ஆம் — ஜனநாயகத்தைப் படுகொலை செய்துவிட்டு, எதேச்சாதிகாரம், அரியணையில் அமர்ந்துகொண்டது கம்பீரமாக.

என்னதான் சூழ்ச்சி செய்து எப்படியோ அரியணையில் அமர்ந்துவிட்டாலும் மைனாரிட்டி கட்சி மைனாரிட்டி கட்சிதானே!

அந்தக் கட்சிக்கு ஆதரவாக இருக்கக் கூடியவர்களும் 44 பேர் தானே!

எனவே அரியணை அடிக்கடி ஆட்டம் கொடுக்கத் தொடங்கிவிட்டது.

இன்றோ நாளையோ, மந்திரிசபை, குப்புறக் கவிழ்ந்து, எதிர்க் கட்சிக்காரர்களின் மந்திரிசபை ஏற்பட்டாலும் ஏற்பட்டுவிடும் என்கிற நிலை உருவாகிவிட்டது.

அப்படி ஒருவேளை திருவாங்கூர்—கொச்சியில், எதிர்க் கட்சிக்காரர்

(13-ம் பக்கம் பார்க்க)

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு சென்ற பத்தாண்டுகளாகக் கூறிவருகிறோமே, அந்த கருத்தைத்தான், தேசியவாதிகளே, இன்று கவர்னர் கூறுகிறார்.

நாங்கள் கூறிய கருத்தை இன்று கவர்னர் கூறுகிறார்!

காங்கிரஸ் கவர்னர்!

உங்களுடைய கவர்னர்!

உங்களுடைய அரும்பெரும் தலைவர் பண்டித நேருவினுடைய அன்பையும் ஆசிர்வாதத்தையும் முறைவறப் பெற்றிருக்கிற கவர்னர்!

அந்தக் கவர்னர் எங்களுடைய அறப்போர் முழக்கத்தைத் திருப்பி ஒப்பிக்கிறார்!

ஒப்பிக்கிறார் என்பதுகூட அவ்வளவு சரியான வாசகமல்ல—எங்களுடைய ஒலியை எதிரொலி செய்கிறார்!

கவர்னர் பீடத்திலிருந்து எங்களுடைய இந்தி எதிர்ப்பு முழக்கம்!

வெற்றி, இதைவிட வேறென்ன வேண்டும் எங்களுக்கு?

தோல்வி, இதைவிட வேறெந்த உருவத்தில் தோன்றவேண்டும் உங்களுக்கு?

சிந்தித்துப் பாருங்கள் சிலர் ஜவஹரின் சீடர்களே, சிற்றமுருதிர்கள்.

இந்தி மொழியைக் கட்டாய மொழியாகத் திணிப்பது தவறு, அநீதி, அக்கிரமம், முறையற்ற செயல்—என்று, இந்தக் கருத்தை எடுத்துக் கூறியதோடு நிற்கவில்லை கவர்னர்.

**இந்தியாவின் தேசிய மொழியாக இருப்பதற்கே தகுதியற்ற மொழி ஹிந்தி என்பதையும் தெளிவாக விளக்கியிருக்கிறார் கவர்னர்!**

சாமர்த்தியமா நாங்கள் கூறுவதிலே? அப்படியானால் தேசியத் தோழரே, இப்படி வாருங்கள்! இதோ இருக்கிறது உங்களுடைய பத்திரிகை, உங்கள் முதலாளி கோயங்காவினுடைய பத்திரிகை, எங்கள் திருக்குறள் முனுசாமியை எதிர்த்து நின்று திண்டிவனம் பார்லிமெண்ட் தொகுதியில் மூக்குடைபட்டாரே உங்கள் ராமநாத் கோயங்கா, அந்தத் தோல்வி வீரரின் தோட்டா, இந்தியன் எக்ஸ்பிரஸ்!—அந்தப் பத்திரிகையின் 27—4—52-ம் தேதியிட்ட இதழ் இதோ இருக்கிறது.

இந்த இதழைப் பிரித்து, மூன்றாம் பக்கத்தைப் படியுங்கள்.

என்ன வாசகம் இருக்கிறது அங்கே?

"1934-ல் தட்சிண பாரத ஹிந்தி பிரசார சபையாராகிய உங்களிடமிருந்து ஒரு நல்லெண்ணத் தூதுகோஷ்டி, காசி நகருக்கு வந்தது.

"அந்தத் தூதுக்குழுவினரை வரவேற்க, அப்போது, காசியில் ஒரு பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

"அந்தப் பொதுக்கூட்டத்தில் நானும் இருந்தேன்.

"உங்கள் சபாவின் செயலாளர் ஸ்ரீமான் சத்ய நாராயணாவை அங்கேதான் நான் முதன் முதலாகப் பார்த்தேன்.

"ஹிந்தி மொழியை இந்தியாவின் தேசிய மொழியாக ஆக்குவதை எதிர்த்து நான் அந்தக் கூட்டத்தில் சொற்பொழிவாற்றினேன். ஸ்ரீமான் சத்ய நாராயணாவுக்கும் இந்த நிகழ்ச்சி நினைவிருக்கக்கூடும்.

"ஹிந்தி மொழிக்கு இந்தியாவின் தேசிய மொழியாகும் தகுதி உண்டா என்று அன்று சந்தேகித்தேன். அந்தச் சந்தேகம் எனக்கு இன்னமும் இருக்கிறது."

கவர்னர் பேசியிருக்கிறாராம் இதுபோல! கூறுகிறது இந்தியன் எக்ஸ்பிரஸ்! கூறுவது "திராவிட நாடு", பத்திரிகையல்ல, தேசியத் தோழரே, இந்தியன் எக்ஸ்பிரஸ்! உங்களுடைய எக்ஸ்பிரஸ்!

ஹிந்தி மொழிக்கு இந்தியாவின் பொதுமொழியாகும் தகுதி உண்டா என்கிற சந்தேகம் கவர்னர் பிரகாசாவுக்கு ஏற்பட்டதாம் 1934-ல்!

அந்தச் சந்தேகம் இன்னமும் தீரவில்லையாம் அவருக்கு!

சந்தேகம் ஏற்பட்ட ஆண்டு, அவரே கூறுகிறார், 1934.

இப்போது நடைபெறும் ஆண்டு, எந்தக் காலண்டரும் கூறும், 1952.

1934—1952

இடையே இருப்பவை பதினெட்டு ஆண்டுகள்!

பதினெட்டு ஆண்டுகளாக எண்ணி எண்ணிப் பார்க்கிறார் ஸ்ரீ பிரகாசா!

ஆனாலும் சந்தேகம் தீர்ந்தபாடில்லை.

பதினெட்டு ஆண்டுகளாகச் சிந்தித்துப் பார்த்தும்கூட, இந்தியாவின் தேசிய மொழியாக இருப்பதற்குத் தேவையான தகுதி உடைய மொழி ஹிந்தி என்னும் கருத்தை ஒப்புக்கொள்ள முடியவில்லை ஸ்ரீ பிரகாசாவால்.

இன்னமும் அதன் தகுதியைப் பற்றி சந்தேகமாகத்தான் இருக்கிறது அவருக்கு.

ஹிந்தி மொழியில் மொத்தம் எத்தனை எழுத்துக்கள் உண்டு என்பதைக்கூடத் தெரிந்துகொள்ளாமல் அதன் அருமைபெருமைகளைப் பற்றி நமக்கு "அறிவுரை" கூற முன்வந்துவிடுகிறார்களே இங்குள்ள காமராஜர்கள், அப்படிப்பட்டவரல்லர் ஸ்ரீ பிரகாசா.

ஹிந்தி மொழியில் சிறந்த புலமை உடையவர்.

அதன் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத்தெரிந்தவர்.

அதன் நெளிவு சுளிவுகளை, அணியழகு சொல்லழகுகளை அனுபவித்து மகிழ்ந்தவர்.

ஹிந்தி மொழியில் சிறந்த பயிற்சியும் ஆழ்ந்த அனுபவமும் உடையவர் என்பது மட்டுமல்ல உண்மை, ஹிந்தி, அவருடைய தாய்மொழி!

ஆகவே அவர் அளிக்கிறார் ஒரு தீர்ப்பு ஹிந்தியைப்பற்றி என்றால் அந்தத் தீர்ப்பு, நம்மால் மதிக்கப்படவேண்டிய தீர்ப்பு.

அது இசைவாணரின் இன்னிசையைப்பற்றிப் பிறவிச் செவிடன் ஒருவன் தருகின்ற தீர்ப்பு அல்ல. இசையின் இனிமை பற்றித் தண்டபாணி தேசிகர் தருகிற தீர்ப்பு அது.

அந்தப் பொருளைப்பற்றிப் பேச அதிகாரம் உள்ளவர் ஸ்ரீ பிரகாசா.

அப்படிப்பட்டவர் கூறுகிறார், ஹிந்தி மொழிக்கு இந்தியாவின் தேசிய மொழியாகும் தகுதி கிடையாதென்று.

அந்தத் தகுதி ஏன் அந்த மொழிக்கு இல்லை என்பதற்கான காரணங்களையும் தந்திருக்கிறார் கவர்னர் பெருமகனார்.

அவர் பேசியிருக்கிறார்:—

"உலகத்திலேயே மிகக் கோரமான அளவுக்குப் படுகொலை செய்யப்பட்டுவிட்ட மொழி ஒன்று இருக்கிறது என்றால் அது ஹிந்தி மொழிதான். யார் வேண்டுமானாலும் அதை எப்படி வேண்டுமானாலும் பேசுகிறார்கள்—எழுதுகிறார்கள். அது மட்டுமல்ல வேடிக்கை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக ஹிந்தி மொழியைப் பேசியும் எழுதியும் கையாண்டுவிட்டு, தத்

(11-ம் பக்கம் பார்க்க)

# இதோ ஒரு சிறுத்தொண்டர்!

"ஐயா! ஐயா!"

"யாரப்பா அது?"

"யாருமில்லை! நான்தான்!"

"நான்தான் என்றால் யார்?"

"ஒரு சிவனடியான். தேவரீருடைய கருணைகடாட்சம் எனக்குத் தேவை!"

வீட்டில் உள்ள பெரியவர் வெளியே வந்து பார்க்கிறார்.

ஒரு பிச்சைக்காரன்!

அவன் நெற்றி நிறைய திருநீறு பூசப்பட்டிருக்கிறது.

அவன் கைகளிலே ஒரு திருவோடு காட்சி தருகிறது.

அவன் கழுத்திலே ஒரு உருத்திராட்ச மாலை தங்கியிருக்கிறது.

பெரியவர் விழுந்து வணங்குகிறார் பிச்சைக்காரன் காலில்!

"வரவேண்டும், வரவேண்டும், என் இல்லத்திற்குத் தாங்கள் எழுந்தருளவேண்டும்" என்று பெரியவர், பிச்சைக்காரனை அன்புடன் அழைக்கிறார்.

பிச்சைக்காரன் உள்ளே நுழைகிறான்.

உட்கார மனை போடப்படுகிறது. அமர்கிறான்.

தாங்கள் என் இல்லத்தில் உணவு அருந்தியருளவேண்டும் என்று பிச்சைக்காரனைப் பணிவுடன் வேண்டுகிறார் பெரியவர்.

உடனே ஒப்புக் கொண்டானா பிச்சைக்காரன்?

இல்லை.

"உணவருந்தத் தடையில்லை, ஆனால் ஒரு கேள்வி." என்றான் அவன்.

"என்ன கேள்வி அது—சொல்லுங்கள் தாராளமாக"—இப்படிப் பேசினார் பெரியவர்.

"தங்களுக்கு இருப்பது ஒரே மகன்தானே?"

"ஆமாம்."

"அந்த மகனும் முதல் மகன் தானே?"

"ஆமாம்."

"என்னை உணவருந்தச் சொல்கிறீரே, நான் கேட்கிற உணவை கேட்கிறபடி சமையல் செய்து போடுவீரா?"

"ஆஹா! நிச்சயமாக!"

"நான் எந்த உணவு கேட்டாலும் போடுவீர்?"

"நிச்சயமாகப் போடுவேன் சிவனடியாரே, நிச்சயமாகப் போடுவேன்."

"சத்தியம் செய்து கொடுப்பீரா?"

"சத்தியமாகச் சொல்கிறேன். நீங்கள் எந்த உணவை எந்தப் பக்குவத்தில் எந்த முறையில் சமையல் செய்யச் சொல்லுகிறீரோ அப்படியே செய்து தங்கட்குப் படைக்கிறேன். சிவனடியார்களுக்கு உணவு படைப்பதையும், அவர்கள் அதை அன்புடன் உண்டு பசியாறுவதையும் கண்டு களிப்பது ஒன்றுதானே என்னுடைய வேலை, அப்படியிருக்கும்போது தங்களுடைய கட்டளையை நான் மறுப்பேனா?"

"சரி! அப்படியானால் மெத்த சந்தோஷம். நான் எனக்குத் தேவையான உணவைக் கேட்கலாமா?"

"தாராளமாகக் கேட்கலாம். கேளுங்கள் உடனே, கேளுங்கள் என்பதுகூடச் சரியான வாசகமல்ல. கட்டளையிடுங்கள், உடனே செய்கிறேன்."

"நீங்கள் இவ்வளவு தூரம் வற்புறுத்திச் சொல்வதால் எனக்குத் தேவையான உணவைச் சொல்லுகிறேன். பிறகு என்மீது கோபித்துக் கொள்ளாதீர்கள். ஒரு குடும்பத்தின் ஒரே பிள்ளையாக இருக்க வேண்டும். அந்தப் பிள்ளையும் முதலிற் பிறந்த பிள்ளையாக இருக்க வேண்டும். அந்தப் பிள்ளையைக் கொன்று, அவன் மாமிசத்தைச் சமைத்துப் பக்குவப்படுத்தி எனக்கு உணவாக்கிப் படைக்க வேண்டும். அப்படிப் படைக்கப்பட்ட உணவைத்தான் நான் உண்பது வாடிக்கை. தங்களால் அப்படிச் செய்ய முடியுமோ?"

"செய்கிறேன் அடியவரே! இதோ, இப்போதே செய்கிறேன்!"

பெரியவர் உள்ளே போகிறார். தன் அன்பு மனைவியை அழைக்கிறார். செய்தியைக் கூறுகிறார், அம்மையாரும் தன் அருமந்த மகனை அறுத்துக் கறி செய்து படைக்க ஒப்புக்கொள்கிறார்கள். பிறகு, தந்தை பிடிக்க, தாய் மகனை அறுக்க, சமையல் தயாராகிறது—மனித மாமிசச் சமையல்!

எங்கேயோ காட்டுமிராண்டிகள் வாழ்கிற பிரதேசத்தில் அவர்களிடையே உலவிவருகின்ற முட்டாள்தனமான கதை அல்ல இது.

சைவப் பெருந்தகையாளர்களெல்லாம் தங்கள் உச்சிமேல் வைத்து மெச்சுகின்ற பெரிய புராணம் என்னும் "அருந்தமிழ்" இலக்கியம் (!!) இருக்கிறதே, அதிலே பொதிந்துகிடக்கிறது இந்த அதி அற்புதமான வரலாறு!!

வீட்டுச் சொந்தக்காரனின் தலைப் பிள்ளையையே கறியாகச் சமைத்துப் போடச் சொன்னார் என்றால் என்ன திமிர் இருக்குமய்யா அந்தப் பிச்சைக்காரனுக்கு என்று நீங்கள் கூறுவீர்கள், ஆத்திரத்தோடு.

அபசாரம்! அபசாரம்! பிச்சைக்காரனாக வந்தவர் திரிபுரம் எரித்த விரிசடைப் பெம்மானும் எம்மான் அல்லரோ! அவரையா திமிர் பிடித்தவர் என்று கூறுவது! கொடுமை கொடுமை! என்று கூறுவர், சைவப் பெரும் புலவர்கள்.

பிச்சைக்காரன்தான் இப்படிக் கேட்டான் என்றால் ஆஹா சரி என்று ஒப்புக்கொண்டானே வீட்டுக்காரன், அவனைவிட மடையன் வேறு யார் இருக்கமுடியும் என்று நீங்கள் கேட்பீர்கள், கொதிக்கும் உள்ளத்தோடு.

ஆனால், "ஆஹா! அந்தப் பெரியவரின் சிவபக்தியே சிவபக்தி! சிவனடியார் கேட்கிறார் என்றவுடனே தன் மகனையும் பலிகொடுக்கத் துணிந்தாரே! என்ன தியாக உணர்ச்சி! என்ன தியாக உணர்ச்சி!" என்று களித்து கண்ணீர் மல்குவர், திருநீறுபூசிகள்.

"வீட்டுக்காரருக்குத்தான் புத்தி மாறாட்டமாகிவிட்டது. சிவபக்தி என்ற பெயரால் சித்தையை இழந்துவிட்டார். ஆனால் அவருடைய மனைவியாருக்குமா மதி மங்கிப்போய்விட்டது? மகனை அறுத்துச் சமையல் செய்யும் அளவுக்கா அவருடைய உள்ளம் மடமை மிகுந்ததாக மாறிவிட்டது?" என்று நீங்கள் கேட்கக் கூடும் திட்டவட்டமாக.

(10-ம் பக்கம் பார்க்க)

# போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 3—5—52 சனிக்கிழமை


# துப்பாக்கி பேசுகிறது!

டுமீல்! டுமீல்!

துப்பாக்கி பேசிற்று!

திரளாகக் குழுமியிருந்த பாட்டாளிகளின் மத்தியிலிருந்து மூவர் கீழே சாய்ந்தனர்!

சாய்ந்தவர்களில் ஒருவர் அந்த இடத்திலேயே பிணமானார்.

ஏனைய இருவர் ஆஸ்பத்திரிகளுக்குத் தூக்கிச் செல்லப்பட்டு, அங்கிருந்து கல்லறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்!

திருவாங்கூர்—கொச்சி ராஜ்யத்திலிருந்து இந்த வாரம் நமக்குக் கிடைத்துள்ள நெஞ்சை உருக்கும் செய்தி இது.

திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தில், பீர்மேடு தாலுகாவில், வண்டிப் பெரியாறு என்னும் வட்டாரத்தில் உள்ளது பசுமலை தேயிலைத் தோட்டம்.

அந்தத் தோட்டத் தொழிலாளிகள் மீதுதான் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருக்கிறது திருவாங்கூர்—கொச்சியை ஆளும் காங்கிரஸ் அதிகார வர்க்கம்.

அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தின் விளைவாகத்தான் மூன்று பாட்டாளிகள் தங்களுடைய இன்னுயிரை இழந்து விட்டனர் இந்தக் கிழமை.

என்ன கொடுமையைச் செய்து விட்டார்கள் அந்தப் பாட்டாளிகள் இவ்வளவு பெருந் தண்டனையை அனுபவிக்க?

ஈவு இரக்கமின்றி யாரையாவது குதறிக் கொன்று விட்டார்களா?

இல்லை!

கன்னக்கோலும் கையுமாகச் சென்று கொள்ளை யடிக்கும் கொடுந் தொழில் புரிந்தார்களா?

கிடையாது!

யாரையாவது அடித்து மிரட்டி உதைத்துத் துன்புறுத்தி உபத்திரவம் புரிந்திருக்கிறார்களா?

அப்படியுமில்லை!

அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் காங்கிரஸ் மந்திரிகளின் உடலுக்கோ உடைமைகளுக்கோ ஏதாவது சேதம் விளைத்து, அதன் காரணமாகக் கடுமையான தண்டனையை அனுபவித்தாக வேண்டிய நிலைமையில் இருந்தார்களா அந்தப் பாட்டாளிகள?

ஒரு போதுமில்லை!

பிறகு என்னதான் செய்தார்கள்? தங்களுடைய உயிரையே இழந்தாக வேண்டிய அளவுக்கு அவர்கள் இழைத்துவிட்ட மாபெரும் குற்றம்தான் யாது?

கொலைத் தொழிலும் புரியவில்லை—கொள்ளை யடிக்கவும் முனையவில்லை—வழிப்பறியும் நடத்தவில்லை—சதிச் செயலும் செய்யவில்லை—என்றாலும் அவர்கள் தங்களுடைய வாழ்வை இழந்து விட்டனரே, ஏன்?

நாகரிக உள்ளம் படைத்த எவரும் கேட்பர் இத்தகு கேள்விகளை.

கேட்டால் என்ன விடை தருகிறார்கள் தெரியுமோ திருவாங்கூர்—கொச்சியை ஆளும் காங்கிரஸ் அதிகார வர்க்கத்தவர்கள்?

வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள் அந்தப் பாட்டாளிகள் என்று கூறுகிறார்கள்!

செய்து விட்டால் என்ன?

வேலை நிறுத்தம் செய்வதென்பது, பாட்டாளி உலகத்தின் ஜீவாதார உரிமை.

பாட்டாளி உலகம், தன்னுடைய குறைபாடுகளைப் போக்கிக் கொள்ளவும், அந்தக் குறைபாடுகள் வளர்வதற்குக் காரணமாகவுள்ள முதலாளித்வ அமைப்பை முறியடிக்கவும் பெற்றிருக்கிற ஒரே ஒரு ஆயுதம் வேலை நிறுத்தம்.

வேலைநிறுத்தம் என்பது விளையாட்டல்ல, வேதனை நிறைந்த ஒரு நிலைமை.

வேலை நிறுத்தம் செய்யும் பாட்டாளி, அப்படிச் செய்வதால், ஏற்கனவே அரைப் பட்டினி கிடக்கும் தன்னுடைய குடும்பத்தார் இனி முழுப்பட்டினி கிடக்க நேரிடும் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்டு தான் செய்கிறான்.

வேலை நிறுத்தம் செய்வது என்கிற முடிவுக்கு அவன் வருகிறபோதே, அவன் மனத்திரையில், பசியால் வாடும் தன் குழந்தை—பள்ளிக்கூடத்திற்

குக் கட்டச் சம்பளமின்றித் தத்தளிக்கும் தன் பெரிய பையன்—எலும்புக் கூடாகக் காட்சி தரும் தன் அன்புமனைவி—இத்தனை பேரும் தோன்றத்தான் செய்கிறார்கள்.

மாதம் முப்பது நாளும் ஓய்வு ஒழிவின்றி வேலை செய்தால்கூட வயிறார உண்பதற்குப் போதுமான உணவின்றி வாடும் தான், இனி, வெறும் பட்டினியைத் தான் தன் தோழனாகக்கொள்ள வேண்டி வரும் என்பதையும் தொழிலாளி அறிந்தே தான் இருக்கிறான்.

வேதனை அதிகமாகும்—வறுமையின் கொடுமை கூடுதலாகும்—துயரம் வளர்ந்து பெருகும்—இவ்வளவும் தெரிகிறது தொழிலாளிக்கு — என்றாலும் வேலை நிறுத்தம் செய்கிறான்.

வேலை நிறுத்தம் செய்வதைத் தவிர வேறுவழி எதுவுமே கிடையாது என்கிற கடைசி முடிவுக்கு அவன் வருகிறநேரத்திலேதான், தொழிலாளி, தைரியமாகவும் துணிச்சலாகவும், வேலைநிறுத்தம் என்கிற விஷப் பரீட்சையில் இறங்குகிறான்.

வேலைநிறுத்தம் செய்வதன் மூலமாக வெற்றி கிடைத்தே தீரும் என்பது நிச்சயமில்லை—தோல்வியோ மிக எளிதில் தோன்றக்கூடும்—அநேகமாக தன்னுடைய வேலையே பறிபோனாலும் போகும் — அதன்பின்னர் வேலை எதுவும் கிடைக்காமல் வீதிகளில் அலையவேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு ஏற்பட்டாலும் ஏற்படலாம் — அறிவான் தொழிலாளி இத்தனை உண்மைகளையும்—ஆனாலும் வேலைநிறுத்தம் செய்கிறான் அதைத் தவிர தன் குறைகளைப் போக்கிக் கொள்ள வேறு பரிகாரம் கிடையாது என்கிற நிலைமை ஏற்பட்டு விட்ட நேரத்தில்.

கொதிக்கும் எண்ணெயிலே கையை நுழைப்பதைப் போன்ற ஆபத்தான காரியம்தான் வேலை நிறுத்தம்.

என்றாலும் வேலைநிறுத்தம் தொடக்கமாகிறது என்றால் என்ன பொருள்?

வேலை நிறுத்தம் செய்வதால் அவனுக்கு ஏற்படக்கூடிய வேதனைகளைவிட இப்போது அவன் அனுபவிக்கும் வேதனை அதிகம் என்று பொருள்!

அங்குலம் அங்குலமாகச் செத்து மடிவதைவிட, வாழ்ந்தால் சுகமாக வாழ்வது—இல்லையேல் ஓரேயடியாகச் செத்துத் தொலைப்பது என்கிற 'விரக்தி' முடிவுக்கு அவன் வந்துவிட்டான் என்று பொருள்.

இனி ஒரு கணமும் பொறுக்க முடியாத அளவுக்கு, வாழ்க்கைப் பாரம், அவனுடைய கழுத்தை முறிக்கத் தொடங்கி விட்டது என்று பொருள்.

ஆம்! ஆகவேதான் வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளியிடத்தில் அக்கறையுடனும் அனுதாபத்துடனும் அணுக வேண்டும் அரசாள வந்தவர்கள்.

அவன் வேண்டுமென்றே தேடியெடுத்துக் கொண்ட விபரீதமல்ல வேலைநிறுத்தம். வேறு மார்க்கம் எதுவும் இல்லாத நெருக்கடியில், அவன் கையாண்டே தீரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுவிட்ட காரணத்தால் அவன் கடைபிடித்துள்ள கடைசிப் போர்முறை. வேலை நிறுத்தம்.

இந்த உண்மையை மறந்து விடக்கூடாது வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளியிடம் அணுகும்எவரும்.

ஆனால் மறந்துவிட்டனர் திருவாங்கூர்-கொச்சி ஆட்சியாளர்கள்.

வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்கள்மீது அநியாயமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டனர்.

மூன்று பாட்டாளிகளின் உயிர்கள் துப்பாக்கிக் குண்டுகளால் பறிக்கப்பட மூலகாரணமாக இருந்துவிட்டடர்.

கொடுமை கொடுமை என்று எவரும் கூறுவர்.

ஆனால் காங்கிரஸ் அதிகார வர்க்கம் இந்தக் கொடுமையைத் தான் புரிந்துவிட்ட குற்றத்திற்காக இன்றளவும் ஒரு சொட்டு கண்ணீர்கூட விடவில்லை.

தங்களுடைய அநியாயமான செயலுக்காக அவர்கள் வருத்தப்படவில்லை என்பது மட்டுமல்ல நம்மால் கவனிக்கப்பட வேண்டிய உண்மை. அந்தச் செயல் அநியாயமானது என்பதையே அவர்கள் இன்னமும் ஒப்புக்கொள்ளவில்லை.

அந்தச் செயலின் அநீதியை ஒப்புக் கொள்ளாதது மட்டுமல்ல, அது நியாயமான காரியம் தான், செய்திருக்கவேண்டியது தான் என்று துணிந்து வாதாடவும் தயங்கவில்லை திருவாங்கூர்—கொச்சியைச் சேர்ந்த காங்கிரஸ் அதிகார வர்க்கம்.

துப்பாக்கிப் பிரயோகம் செய்ததே பெருங்குற்றம்.

ஆனால் அப்படிச் செய்தது நியாயம்தான் என்று வாதாடுவது இருக்கிறதே அது நவ இரக்கமற்ற ஹிமாலயக் குற்றம்.

நிரபராதியின் உடலிலே கத்தியால் குத்திவிட்டு, குத்தப்பட்ட இடத்திலே நுவல் ஒன்றையும் நுழைப்பது போன்ற பெருங் கொடுமை, திருவாங்கூர் கொச்சி அதிகார வர்க்கம் புரிந்திருக்கிற காரியம்.

திருவாங்கூர் — கொச்சியை ஆளும் தேசிய அமைச்சர் அவையும் இதே போன்ற நவ இரக்கமற்ற போக்கைத் தான் தன்னுடைய தனிப் பெரும் பண்பாகக் கொண்டிருக்கிறது.

(16-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், "மனைவியார் என்றால் அந்த அம்மையார் அல்லவா மனைவியார்! பதிசொல் தவறாத பாவை என்றால் அந்த அம்மையாரைப் போல அல்லவா இருக்கவேண்டும்! வாழ்க அந்த அம்மையாரின் திருப்பெயர்! வாழ்க! வாழ்க!" என்று தம்மை மறந்து கூவுவர் தம் மதியை மறந்த சிவநெறிச் சிலர்கள்.

சிவனடியார்களுக்குத் தொண்டு செய்வதையே தன் பிறவிப்பயன் என்று கருதினாராம் ஒரு பெரியவர். சிவனடியார்களுக்குச் செய்யும் பணிவிடை சிவபெருமானுக்கே செய்யும் பணிவிடை போன்றது என்று அவர் எண்ணமிட்டாராம். ஆகவே நாள்தோறும் அவர், சிவனடியார்களை அழைத்து, உணவருந்தச் செய்துவிட்டு அதன் பிறகுதான் தான் உண்பது வழக்கமாம். அவருடைய இந்தச் சிவபக்தியின் எல்லை எது என்பதைச் சோதித்தறிவதற்காகத்தான் ஆண்டவன் சிவனடியார் வேடத்தில் வந்து, பிள்ளைக்கறி கொடு என்றும் கேட்டுப் பார்த்தாராம்.

கூறுகிறார்கள் பல சிவநெறியாளர்கள் இதுபோல.

ஆனால் அந்தச் சிவநெறியாளர்களையே இன்றையதினம் யாராவது விபூதிபூசிய ஒரு பிச்சைக்காரன் பிள்ளைக்கறி கேட்டால், ஆஹா இந்தா என்று தங்கள் பிள்ளைகளை அறுத்துக் கொடுத்துவிட மாட்டார்கள் அவர்கள். பிச்சைக்காரனின் கன்னத்திலேதான் தங்கள் திருக்கரங்களை விளையாடவிடுவார்கள்!

என்றாலும், பெரியபுராணத்தில் காணப்படும் இந்தப் பித்தன் கதையைப் படித்துவிட்டு, "ஆஹா! பிள்ளைக் கறி படைத்த அந்தப் பெரியவர் அல்லவா ஜீவன் முக்தர்" என்று ஓயாமல் பேசமட்டும் ஒருநாளும் அவர்கள் தவறுவதில்லை.

அவர்களுடைய மூளையிலே படிந்திருக்கிற மடமை, பிள்ளைக் கறி கொடுத்த பித்தனைப் பாராட்டுகிற அளவோடுதான் நின்றிருக்கிறதே தவிர, தங்களுடைய பிள்ளைகளையே அறுத்துக் கொடுக்கிற அளவுக்கு வளர்ந்து பெருகவில்லை.

ஆனால் காச்சியிலே, இந்த 1952-லே, இஸ்லாமிய சமுதாயத்திலே ஒரு சிறுத்தொண்டர் தோன்றியிருக்கிறார். அவர் ஆண்டவன் கேட்டார் என்று கருதிக்கொண்டு, தம்முடைய மகனையே பலியிட்டுவிட்டிருக்கிறார்.

அல்லாவின்மேல் தமக்கு உள்ள அளவற்ற பக்தி காரணமாக, என்ன செய்கிறோம் என்பதை நன்றாகத் தெரிந்துகொண்டே, தம்முடைய ஒன்பது வயது பாலகனைக் கத்தியால் வெட்டிக் கொன்று காணிக்கை சமர்ப்பித்து விட்டாராம் அந்த "அல்லா பக்தர்"!

முந்திய நாள் கனவில், அல்லா தோன்றி, அவருடைய மகனைக் காணிக்கையாகக் கொடு என்று கேட்டதாகவும், ஆண்டவனின் அந்தக் கட்டளைப்படியே தன் மகனைத் தான் பலியிட்டுவிட்டதாகவும் அந்த அல்லா பக்தர் தெரிவித்திருக்கிறாராம்!

தன் வீட்டு முற்றத்திற்குப் பையனை அழைத்துச் சென்று, தரையில் மண்டியிட்டுத் தலை குனியச் செய்து, பிறகு, ஓர் அடி நீளமுள்ள ஒரு கத்தியால் அவனைப் 'பலி'யிட்டாராம் அந்த நவீன சிறுத்தொண்டர்.

பலியிடு நிகழ்ச்சி முடிவுற்றதும், குருதி படிந்த கைகளுடன் வீதிக்கு ஓடிவந்து, தெருவில் போவோர் வருவோரையெல்லாம் அழைத்துத் தாம் செய்துள்ள செயற்கரும் செயலைப் பாரீர் பாரீர் என்று காட்டிக் கொண்டிருந்தாராம் அந்தப் பித்தர்.

இந்த வாரத்தில் நமக்குக் கிடைத்துள்ள செய்தி இது.

மூடநம்பிக்கை, நம் நாட்டிலே, ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரூன்றியிருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சி நன்கெடுத்துக் காட்டுகிறது.

மதவெறி, மக்களை எந்த அளவுக்கு மிருகங்களாக மாற்றிவிடுகிறது என்பதை அழகுற விளக்கவும் இந்த நிகழ்ச்சி நன்கு பயன்படுகிறது.

ஆண்டவன் கேட்டாராம் அருமைப் பிள்ளையை! ஆஹா என்று பலியிட்டுவிட்டாராம் இந்தப் புதிய சிறுத்தொண்டர்!

மடமையின் ஆதிக்கம் எவ்வளவு பலமாக இருக்கிறது இந்தியக்கண்டத்தில்!

கருணையே வடிவாக இருப்பவர் என்று கூறப்படும் ஆண்டவன், குழந்தையைக் கொலைசெய் என்று கட்டளையிடுவாரா?

அப்படிக் கட்டளையிட்டால் அவர் ஆண்டவன்தான் ஆவாரா?

அப்படியே கட்டளையிட்டாலும் அதை நிறைவேற்றுவது அறிவுடைமையாகுமா?

ஏன் இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கவில்லை அந்தக் கொலைகார மதவெறியன் என்று நாம் கேட்கவில்லை.

நமக்குத் தெரியும் இப்படிப்பட்ட சிறுத்தொண்டர்கள் இந்தியக் கண்டத்தில் உலவுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம், இந்தப் பூபாகத்தில் உள்ள படித்தவர்கள் என்பவர்கள் பகுத்தறிவை நாட்டிலே வளரவிடவில்லை.

ஆகவே குற்றம் அந்தப் படித்தவர்கள் மீதுதான் இருக்கிறது. சிறுத்தொண்டர்கள் மீது அல்ல.

சிறுத்தொண்டர்கள் சிறுத்தொண்டர்களாக இருப்பதற்கே காரணம் படித்த மனிதர்கள் என்பவர்கள் இந்தியாவில் உருவாக்கி வைத்திருக்கிற மூடநம்பிக்கைச் சூழ்நிலைதான்.

இலக்கியங்கள்
கவிதை ஏடுகள்
சிறுகதைச் சுவடிகள்
பெரிய நாவல்கள்
சினிமாப் படங்கள்
நாடக அரங்குகள்
தினசரி ஏடுகள்
வார, மாத இதழ்கள்
ஆட்சியாளர் நடவடிக்கைகள்
அரசியல் தலைவர்களின் சொற்கள்

இவை அத்தனையிலேயும், மூடநம்பிக்கை, மதவெறி, முட்டாள்தனம், பழமைப்பித்து, சடங்குப் பைத்தியம் முதலிய பாம்புகளும் தேள்களுமே நெளிகின்றன, படித்தவர்கள், பட்டதாரிகள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், என்று உள்ள "பெரிய மனிதர்கள்" எல்லோரும், இந்தப் பாம்புகளையும் தேள்களையும் போற்றிப் பாதுகாக்கும் பணியைத்தான் தேசத் தொண்டு என்று கருதுகிறார்கள் தப்பித் தவறி யாராவது ஒருவர் இருவர், மடமை ஒழிப்புப் பணியைத் துவக்கிவிட்டாலோ, அவர்களுக்கு நாஸ்திகர்கள் என்ற பட்டத்தைக் கொடுத்து, அவர்களை சமுதாய விரோதிகளாக நாட்டு மக்கள் கண்முன்னால் தோன்றச் செய்துவிடுகிறார்கள் இந்தியக் கண்டத்து ஆதிக்கவாதிகள்.

கலை உலகம், பத்திரிகை உலகம் அரசியல் உலகம், எல்லாமுமே மடமையை வளர்க்கும் மகத்தான

உலகங்களாக இருக்கும்படி செய்யப்பட்டுவிட்டன இந்திய பூபாகத்தில்,

படித்தவர்கள் செய்த பொல்லாங்கு இது.

இந்தப் பொல்லாங்குக்குப் பலியாகிவிடுகிறார்கள் சூதுவாது அறியாத பாமரர்கள்.

உண்மைக் குற்றவாளிகள் பாமரர்கள் அல்ல! அவர்களைக் குற்றம் புரியத் தூண்டும் சூழ்நிலையை உருவாக்கி வைத்துள்ள படித்தவர்களே உண்மைக் குற்றவாளிகள்!

பாஞ்சாலி சபதம்
அனுமான் தூது
ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்
வள்ளி திருமணம்
சிறுத்தொண்டர் சரிதம்
இயற்பகையார் வரலாறு
இராமாயணம்—புதிய பதிப்பு
பெரியபுராண விரிவுரை

என்று கதா காலட்சேபமும், இலக்கிய விமர்சனமும் செய்துகொண்டிருக்கிறார்களே இன்னமும் அந்த மகானுபாவர்கள்தான் காரணம் புதிய சிறுத்தொண்டர்கள் நாட்டிலே புறப்பட்டபடி இருப்பதற்கு.

மலேரியா நோய் தொலைய வேண்டுமானால் நோய்கண்டவர்களுக்கு மருந்து கொடுத்தால் மட்டும் போதாது. அந்த நோயை உண்டாக்கும் மூலப் பொருள்களாக இருக்கும் சாக்கடைகளைத் தூய்மைப்படுத்தி, அவற்றிலிருந்து பிறக்கும் கொசுக்களை ஒழித்தாக வேண்டும்.

அதுபோலத்தான், சிறுத்தொண்டர்கள் நாட்டிலே தோன்றாமலிருக்க வேண்டுமானால் சிறுத்தொண்டர்களைத் தண்டித்துவிட்டால் மட்டும் போதாது. சிறுத்தொண்டர்களை உருவாக்குகின்ற சூழ்நிலையையே ஒழித்தாகவேண்டும். அந்தச் சூழ்நிலையை உண்டாக்குகின்ற இலக்கியங்கள் தீயில் போட்டுப் பொசுக்கப்பட வேண்டும்; நாடகங்கள் நடத்தப்படக்கூடாது என்று தடுக்கப்படவேண்டும்; சினிமாப் படங்கள் சென்சார் போர்டாரின் கத்தரிக்கோலுக்கு இரையாகவேண்டும், பத்திரிகைகள் அழிந்து ஒழியவேண்டும்.

பழமை ஒழிப்புப் பணியைச் செய்யவேண்டியது, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலும் உள்ள இளைஞர்களின் முதற்பெருங் கடமை.

இந்தக் கடமையை அவர்கள் குறைவின்றி நிறைவேற்றினால்தான், இந்த இரு நாடுகளும் உலக மன்றத்தின்முன் தலைநிமிர்ந்து நிற்கமுடியும், இந்த இரு நாட்டு மக்களும் மக்களாக வாழமுடியும்.

வீர வாலிபர்களே! உரிமைப் போர்ப் படையின் ஈட்டி முனை போன்றவர்களே! வஞ்சகம் அறியாத உள்ளம் படைத்த அரிய இளைஞர்களே! சடங்கு சம்பிரதாயம் போன்ற கோட்டை கொத்தளங்களைத் தவிடுபொடியாக்கக் கூடிய திறமை படைத்தவர்களே!

வாருங்கள், வாருங்கள். மடமை ஒழிப்புப் பணி உங்களை இரு கை கூப்பி அழைக்கிறது. அந்தப் பணியை ஆற்ற, ஆர்வத்துடன் முன் வாருங்கள் வேகத்துடன் தொண்டாற்றுங்கள். புதுவாழ்வை நம் சமுதாயத்தில் உருவாக்கிக் காட்டுங்கள். இதோ ஒரு சிறுத்தொண்டர் என்று அடிக்கடி பத்திரிகைகளிலே செய்திகள் வருவதைப் படித்துப் பார்த்துவிட்டு மனம் நோகவேண்டிய இன்றைய பரிதாபகரமான சூழ்நிலையை மாற்றி அமைத்து மறுவடிவம் கொடுக்க உங்களால் முடியும். உங்களால்தான் முடியும். ஆகவே தயாராகுங்கள், துணிந்து முன் வாருங்கள், நாட்டுக்கு நல்வாழ்வைத் தாருங்கள்.

---

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தமது ஹிந்திதான் சரியான ஹிந்தி என்றும், மற்ற எல்லோரும் தான் பேசுவதையும் எழுதுவதையும் போலத்தான் ஹிந்தி மொழியைப் பேசி எழுதவேண்டும் என்றும் கட்டளை வேறு பிறப்பிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் ஹிந்தி சிக்கிக்கொண்டிருக்கும் காரணத்தால், அந்த துரதிர்ஷ்டவசமான மொழிக்குத், தூய்மை என்பதோ தெளிவு என்பதோ ஏற்பட முடியாமல் போய்விட்டது. இந்தியாவின் தேசிய மொழியாக இருப்பதற்குரிய தகுதி ஹிந்தி மொழிக்குக் கிடையாது என்று நான் கூறுவதற்கு ஒரு முக்கியமான காரணம் இதுதான்:

கவர்னர் கூறுகிறார் — ஹிந்தி மொழிக்கு ஒரு திட்டவட்டமான வடிவம் கிடையாதாம்.

கவர்னர் கூறுகிறார் — யார் வேண்டுமானாலும் அந்த மொழியை எப்படி வேண்டுமானாலும் சித்திரவதை செய்துவிடுகிறார்களாம்.

கவர்னர் கூறுகிறார் — ஹிந்தி மொழி குற்றுயிரும் குலை உயிருமாகக் கிடக்கிறதாம்.

கவர்னர் கூறுகிறார் — ஆகவே அந்த மொழிக்கு இந்தியாவின் தேசியமொழியாகும் தகுதி கிடையாதென்று.

தென்னாட்டுத் தேசியவாதியே— நீர் என்ன கூறுகிறீர்?

தேசத்துரோகி என்ற பட்டத்தைக் கவர்னருக்கும் தந்துவிடுவதா உத்தேசமா?

எங்களுக்குக் கொடுத்ததைப் போல அவருக்கும் ஓர் ஆறுமாதக் கடுங்காவல் கொடுப்பதாக எண்ணமா?

"ஐயையோ கவர்னரே! இனி இப்படியெல்லாம் பேசிடவேண்டாம்!" என்று அவரிடம் இரகசியமாகச் சென்று மறைவாகக் கூறிட ஆசையா?

"செ! செ! என்ன இருந்தாலும் இந்தக் கவர்னர் இப்படியா பேசி நம் மானத்தை வாங்குவது!" என்று உங்கள் தோழர்களுக்கிடையிலே ஓர் உரையாடல் நடத்தி, அந்த உரையாடல் அளவோடேயே, ஆத்மதிருப்தி அடைந்துவிடுவதென்ற ஆலோசனையா?

இவற்றிலே எந்த எண்ணம் உலவுகிறது உங்களுடைய உள்ளத்தில்? தேசியத் தோழரே, தயவு செய்து கூறும்.

* * *

* ஹிந்தி மொழிக்குத் தேசிய மொழியாகும் தகுதி கிடையாது.
* ஹிந்தி மொழியைக் கட்டாயமாகத் திணிப்பது ஆகாது.

இந்த இரண்டு கருத்துக்களை நெடுங்காலமாகத் திராவிட இயக்கம் கூறிவந்தது.

இப்போது காங்கிரஸ் கவர்னரே இந்தக் கருத்துக்களை ஆதரித்துப் பேசத் தொடங்கிவிட்டார்.

ஹிந்திப் பிரச்சினையிலே வெற்றி நமக்கு, தோல்வி காங்கிரசுக்கு, என்பதை விளக்க இன்னுமா வாதம் தேவை?

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

போதகம் புரியத் தொடங்கிவிட்டான்!

* * *

"ரோமாபுரி!............மதத்தைப் போற்றிப் பாதுகாக்கும் புரவலர்களான போப்பாண்டவர்கள் வாழும் புனிதத்தலம்! கேட்கும் மக்கள் கண்ணீர் மல்கிக் கசிந்துருகும்படித் தங்களது நெஞ்சம் நெக்குருகச் செய்யும் போதனையால், ஆண்டவன் மீது அபார பிரேமையை உண்டுபண்ணும் பக்த சிரோமணிகள் வாழும், பாபத்தைக் கண்டோ, கேட்டோ அறியாத புண்ணியபூமி! அங்கு வாழும் ஒவ்வொரு மதகுருமாரும், போப்பாண்டவரும், மகேசுவரனின் ஒவ்வொரு கூறுகள்! அங்கிருக்கும் மாதாகோயில்கள் அத்தனையும் விண்ணவர்கள் மண்ணுலகில் கட்டிக்கொண்ட குடியிருப்புக்கள்!" — என்றெல்லாம் மார்ட்டின் லூதர் ரோமாபுரியைப் பற்றி எண்ணமிட்ட வண்ணம், என்று சென்று காண்பது அந்தச் சூதுவாதறியா சொர்க்க பூமியை" எனப் 'பக்திக் கனவு' கண்டுகொண்டிருந்தான்.

அந்தப் 'பக்திக் கனவு'களெல்லாம் பகற்கனவுகளாகும் நேரம் அவனுக்குச் சீக்கிரத்திலேயே கிட்டியது! — லூதருக்கு ரோமாபுரி செல்லும் வாய்ப்புக் கிடைத்துவிட்டது; கால்நடையாகவே நடந்து ரோமாபுரியை அடைந்தான் லூதர்.

அங்கு அவனுக்குக் கிடைத்த அனுபவங்கள்......!—அவன் அதுவரை நெஞ்சிலே நிர்மாணித்து வைத்திருந்த 'அழகு மாளிகை'யின் அடித்தளத்தைச் சுக்கு நூறாகச் சிதறவடித்தது; தூரத்திலிருந்து பார்ப்பதற்குத் தகதகவென ஒளிச்சுடர் வீசும் தங்கக் கூரைபோட்ட அவனது 'கற்பனைக் கோயிலி'ன் உள்ளே தேங்கிகிடக்கும் சாக்கடைச் சகதியின் உண்மையான உளை நாற்றம் அவனைத் திக்குமுக்காடித் திணறச் செய்தது. அவன் மதஸ்தாபனத்தை வெறுத்தான்!

ரோமாபுரி மதகுருமார்களும், போப்பாண்டவரும் இலௌகிக வாழ்க்கையில் ஈடுபட்டு இன்பரசத்தைப் பிழிந்தெடுத்து ருசித்துக் கொண்டிருந்தார்கள்! 'போதனை'— என்ற கடமை ஒருபுறமும், 'பொழுதுபோக்கு' — என்ற களியாட்டம் மற்றொருபுறமுமாக இருந்தது அந்தப் புனிதத் தம்பிரான்களுக்கு! "பஞ்சமா பாதகங்களை ஒழித்துக்கட்டு"—என்ற அறவுரை தாழ்வாரத்திலும், "பச்சைப் பசுங்கிளியே! உன்னைப் பார்த்தால் பசி தீரும்! உனது தளிர்க்கையால் ஊற்றி, தாமரை இதழால் எச்சில் படுத்தி ஒரு கோப்பை மது தரமாட்டாயா?" என்ற "காதல் கீதத்தை" அறையிலுமாக நடத்தி ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தார்கள், அந்த மக்களின் தொண்டொன்றே குறிக்கோளாகக் கொண்ட 'தொண்டரடிப் பொடியாழ்வார்கள்'!

மார்ட்டின் லூதருக்கு, இவைகள் மட்டும் 'அவர்கள்'மீது வெறுப்புண்டாவதற்குக் காரணமாயிருக்கவில்லை! 'பாப மன்னிப்புக்கள்' (Indulgences) என்ற முறையில், மதகுருமார்களுக்குப் பணம் கொடுத்தால் பரமன் மக்களது பாபங்களை மன்னித்துவிடுவதாகக் கூறி ஏமாற்று வழியிலே மதகுருமார்கள் ஏராளமான பொருள் சம்பாதித்தானது லூதருக்கு 'அவர்கள்' மீது இருந்த வெறுப்பை அதிகப்படுத்தியது!

லூதர் விட்டன்பர்க் நகருக்குத் திரும்பிய வுடனேயே மதஸ்தாபனத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துவிட்டான்! ரோமாபுரியில் வாழும் "மதத்தின் தத்துப் புத்திரர்கள்" செய்யும் மட்டரகச் செயல்களை வெட்டவெளிச்சமாக்கினான்! 'பாபமன்னிப்பு'—என்பதும் அதன் பெயரால் பணம் வசூலிப்பது, "மூழுச் சோம்பேறிகள் நடத்தும் முதலில்லா வியாபாரத்தின் நஷ்டமில்லாத பேரம்" என்ற உண்மையை நாடறிய விளக்கினான்! விட்டன்பர்க் சர்வகலாசாலையின் மாணவர்களை அணிவகுத்து நடத்திச் சென்று அவர்களுக்குத் தான் கண்ட அனுபவங்களைக் கூறி 'மதச் சீர்திருத்தம் செய்ய வாரீர்'—என்ற அறைகூவல் விடுத்தான்! 'மதச்சீர்திருத்த இயக்கம்!—என்ற ஒன்றை நிறுவி நாடெங்கும் தனது கொள்கைகளைப் பரப்பத் தொடங்கினான்!

* * *

மார்டின் லூதர் இவ்வாறெல்லாம் செய்வது, மதஸ்தாபனத்தின் ஆணிவேரிலே வெந்நீரை ஊற்றுவதாகும் என்ற உண்மையை உணர்ந்த 'சமயத்தின் செல்லப்பிள்ளைகள்' அவனை அழித்தொழிக்கத் திட்டம் திட்டினார்கள்! மார்ட்டினுக்கு மக்களின் ஆதரவு அதிகமிருந்ததால் அவனை நேரடியாக நெருங்கமுடியாது என்பதையறிந்து முதலிலே ஸ்பெயின் நாட்டு மன்னன் ஐந்தாம் சார்லஸைத் தங்கள் வலையிலே வீழ்த்தி, பிறகு அவனைக் கொண்டு லூதரை அடக்கியொடுக்கச் சதி செய்தார்கள் அந்தச் 'சமய' சஞ்சீவிகள்!

* * *

இதற்கிடையிலே சுலபமாக லூதரைப் பணிய வைத்திடலாம் என்ற எண்ணத்தோடு குறுக்கு வழியொன்றைப் பயன்படுத்தினார்கள் மதகுருமார்கள்!

'லூதர் செய்த குற்றங்கள்'— என்ற தலைப்பிலே லூதரின் மீது, மதஸ்தாபனத்தை எதிர்த்த குற்றம், போப்பாண்டவரின் மீது தவறான எண்ணங்களைக் கற்பித்த குற்றம், பாபமன்னிப்பை எதிர்த்ததன் மூலம் கடவுளை நிந்தித்த குற்றம்,— போன்ற பல குற்றங்களை ஏற்படுத்தி, அக்குற்றங்களை இனிச் செய்வதில்லை என்று உறுதி கூறி போப்பாண்டவரின் மன்னிப்பைக் கோரினால் விட்டுவிடுவதாகவும்; இல்லையெனில் விசாரணை மூலம் தண்டனை தரப்படுமென்றும் பயமுறுத்திப் பார்த்தார்கள்!

ஆனால் மார்ட்டின் லூதர் விட்டன்பர்க் பல்கலைக் கழக மாணவர்கள், பொதுமக்கள்,— முன்னிலையிலே தன்மீது தரப்பட்டிருந்த 'குற்றப்பத்திரிகை'யைத் தீவைத்துக் கொளுத்தினான்! 'மூடப் பழக்கங்களின், கருத்துக்கொவ்வாத கற்பனைகளின், பொருளற்ற புனைந்துரைகளின் முடிவு இப்படித்தானிருக்கும்'—என்று தொடர்ந்து முழக்கமிட்டான்!

கன்னம் பழுக்கும்படியாகத் தரப்பட்ட இந்த அறை, மதஸ்தாபனத்தின் கருங்கோபத்தைக்கிளறிவிட்டது! அந்தக் கோபத்தின் விளைவுதான் வொர்ம்ஸ் நகரத்திலே, மன்னர் மன்னன் ஐந்தாம் சார்லசுக்கு எதிரிலே மாவீரன் மார்ட்டின் லூதர் கொண்டுவந்து நிறுத்தப்பட்டதாகும்! "ஒருவித ஊறுபாடுமின்றித் திருப்பியனுப்புகிறேன்". —என்று வாக்குறுதி கொடுத்திருந்தமையின் லூதரை அப்போது அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை! ஆனால் முன்னேற்பாட்டின்படி அரசனது குதிரைவீரர்கள் வழியிலே லூதரைப் பிடித்துவிட்டார்கள்!

"அறிவுச் சிங்கமொன்று மூடர் விரித்திருந்த மோசவலையிலே மாட்டிக்கொண்டது!"

* * *

லூதரைப் பிடித்த இராணுவ வீரர்கள் அவனை எங்கோ வெகுதூரம் கொண்டு சென்றார்கள்! தனிமையான, அவனுக்கு முன்பின் பழக்கமில்லாத ஒரு வீட்டிலே அவனை இறக்கி, கட்டுக்களை அவிழ்த்து, அவனுக்கு வேண்டிய உணவு, உடை முதலியன கொடுத்து, கொஞ்சமும் குறைவின்றி நடத்தினார்கள்!

தனது எதிரியின் கையாட்கள் இவ்வளவு உபசாரம் செய்வதைக் கண்டு லூதர் பெரிதும் வியப்படைந்தான்! கொலை செய்யப்படப் போகும் ஆட்டின் வாயிலே திணிக்கப்படும் 'கடைசி வாய்ப்புல்'லாகத்தான் அந்த உபசாரங்கள் இருக்க வேண்டுமென அவன் எண்ணினான்!

ஆனால்!............அந்தக் குதிரை வீரர்கள் அவனது நண்பர்கள் என்பதை, அவர்கள் தங்களது உடைகளைக் களைந்தவுடன் தெரிந்துகொண்டான்! லூதருக்கு, அரசனால் ஏற்படப்போகும் ஆபத்தை முன்கூட்டியே அறிந்திருந்த அந்த நண்பர்கள், எவரும் சந்தேகிக்காதபடி, அரசனது குதிரை வீரர்கள் போல் உடைதரித்து லூதரைத் தப்புவிக்க அந்த உபாயம் செய்தார்கள்.

* * *

பின் பல ஆண்டுகள் அல்லல்களுக்கிடையிலே மார்ட்டின் லூதர் வாழ்ந்தான்! ஓய்வு ஒழிவின்றித் தனது இயக்கத்திற்காக ஓடியாடி உழைத்தான்! பகல் இரவு என்று பாராது தனது கொள்கைகளை எடுத்துச் சொல்லிப் பகுத்தறிவை வளர்த்தான்! அரசாங்கத்தாரால் நாடுகடத்தப்பட்டும், மதவாதிகளின் தொல்லைகளுக்கு ஆளாகியும் கூட கொண்ட கொள்கையின் உறுதி குறையாது, கண்ட உண்மைகளை எடுத்துச் சொல்லித் தயங்காது பணியாற்றினான்!

* * *

"இப்போதைக்கு லூதர் இறந்து பட்டவன்தான்!"............இல்லை இல்லை!......தவறு!!............லூதர் வாழுகிறான்! உண்மையான உள்ளங்களில் ஒத்து உறவாடி வீர உலா வருகிறான் லூதர்! பண்பட்ட இதயமும், பகுத்தறிவுக் கருத்துக்களும் கொண்டோரின் முன்னிலையிலே முற்போக்கு வாதியாகப் பவனி வருகிறான் லூதர்! மதவாதிகளின் குடல் கடுங்க முடிமன்னர்களின் அடல் ஒடுங்க, மனித உள்ளங்களில் வாழுகிறான் லூதர்!

ஆம்!......அவன் ஒரு "வாழும் லூதர்!"—"அந்த லூதர்" நீடுழி வாழ்க!


# சிறந்த புத்தகங்கள்!

| | | |
|---|---|---|
| எழிலரசி கிளியோபாட்ரா | 1 | 8 |
| அழகு ராணி | 1 | 4 |
| இன்பத்தின் எல்லை | 1 | 0 |
| பசி (இரண்டாம் பதிப்பு) | 1 | 0 |
| ஆசைத்தம்பியின் அறிவுரைகள் | 0 | 6 |
| ஆசைத்தம்பியின் முத்துக் குவியல் | 0 | 3 |
| மக்கள் சக்தி | 0 | 6 |
| சுழல்விளக்கு | 1 | 0 |
| உணர்ச்சிமாலை | 0 | 8 |
| கருணாநிதியின் வர்ணனைகள் | 0 | 10 |
| வேதனைக் குரல் | 0 | 4 |
| 144 | 0 | 8 |
| துடிக்கும் இளமை | 0 | 6 |
| விதைக்காது விளையும் கழனி | 0 | 6 |
| நாம் இருவர் | 0 | 3 |
| சென்னையில் ஆசைத்தம்பி | 0 | 4 |
| நடிகன் | 0 | 8 |
| வைத்தியக்காரி | 0 | 6 |
| ரௌடி | 0 | 6 |
| குமாரி செல்வா | 0 | 6 |
| மனோரஞ்சிதம் | 0 | 12 |
| இரண்டு கதைகள் | 0 | 8 |
| மலர் சிரித்தது | 0 | 6 |
| கற்புக்கு ஆபத்து | 0 | 3 |
| வியர்வை விருந்து | 0 | 6 |
| களபலி | 0 | 6 |
| அன்னை | 0 | 3 |
| ஓரே முத்தம் | 0 | 3 |
| தமிழ் உள்ளம் | 0 2 | 6 |

தனிப்பிரதி வேண்டுவோர் புத்தக கிரயத்தை M. O. செய்யவும்—விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனாம்.

விவரங்களுக்கு:—

## எம். சூரி

குப்பையர் தெரு,
சென்னை—1.


(5-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் மந்திரிசபை ஏற்பட்டுவிட்டால், பிறகு அந்த ராஜ்யத்தில் தங்களுடைய ஏகாதிபத்யத்தை, இப்போது உள்ள அளவுக்குச் செலுத்தமுடியாதே, என்ன செய்வது, என்கிற அச்சம் உடனே ஏற்பட்டுவிட்டது ஐவகர் மந்திரி சபைக்கு.

அந்த அச்சத்தின் விளைவாக நீண்ட ஆலோசனைகள் பலவற்றை நடத்திற்று டில்லி ஆதிக்கபீடம்.

கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது.

அரசியல் ஆலோசகர் என்ற பெயரில் ஓர் அதிகாரியை திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்திற்கு நியமனம் செய்வது—அந்த ஆலோசகருக்கென்று சில விசேஷ அதிகாரங்களை ஏற்படுத்துவது—எதிர்க்கட்சிக்காரர்களின் மந்திரிசபை ஒருவேளை அந்த ராஜ்யத்தில் ஏற்பட்டுவிட்டாலும் இந்த ஆலோசகர் மூலமாக அந்த ராஜ்யத்தைத் தன்னுடைய இரும்புப் பிடியில் சிக்கித் தவிக்கும்படி செய்வது.

இதுதான் டில்லிப்பீடம் எடுத்த முடிவு.

"அனுப்பப் போகிறேன் ஓர் ஆலோசகரை! திருவாங்கூர் கொச்சியே! அவரை ஏற்றுக்கொண்டாக வேண்டும் நீ" என்று கட்டளை பிறப்பித்தது டில்லி.

டில்லிபுரியின் இந்தத் தாக்கிதை ஏற்க முடியாது என்று எதிர்த்துப் பேசிற்று திருவாங்கூர் கொச்சி,

இராஜ்ய மெங்கும் கண்டனக் கூட்டங்கள், எதிர்ப்பு முழக்கங்கள். பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்கள். ஆட்சேபக் குரல்கள்.

டில்லியின் கட்டளை திருவாங்கூர் கொச்சியில் ஒரு சிறிய புயலை எழுப்பிவிட்டது.

வட இந்திய ஆதிபத்யத்தின் கொடுமையைத் திருவாங்கூர்—கொச்சி இராஜ்யமக்கள் உணர்ந்து கொள்ள இந்தக்கட்டளை ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்துவிட்டது.

எதிர்ப்பு—எதிர்ப்பு—எதிர்ப்பு—திக்கெட்டும் எதிர்ப்பு என்கிற சூழ்நிலை தோன்றிவிட்டது.

டில்லியின் தாக்கிதை ஏற்கமாட்டோம்—அரசியல் ஆலோசகரை ஏற்கமாட்டோம் என்கிற முழக்கம் திருவாங்கூர்—கொச்சி யெங்கும் கேட்கத் தொடங்கிவிட்டது.

இப்போது செய்தி வருகிறது பத்திரிகைகளிலே—டில்லி

(16-ம் பக்கம் பார்க்க)

# “வாழும் லூதர்!”

[தில்லை — தொல்காப்பியன்]

ரைன் நதி; அதன் கரையிலுள்ள வொர்ம்ஸ் (Worms) நகரம்; அரசன் தங்கும் மாளிகை; அரியாசனத்திலே மன்னர் மன்னன் ஐந்தாம் சார்லஸ் அமர்ந்திருக்கிருன்; அவனது இருபக்கத்திலும் நாட்டின் இராசப் பிரதிநிதிகள் நின்றுகொண்டிருக்கின்றனர்; மந்திரிமார்கள் வாய்மூடி மௌனியாகக் காட்சி தருகிறார்கள்; அரசனுக்கெதிரே நின்றுகொண்டிருக்கிறான் மார்ட்டின் லூதர்! (Martin duther)

“லூதர்! உன்னுடைய எதிர்ப்புக் கொள்கைகளையெல்லாம் மனதினின்றும் எடுத்தெறிந்துவிட்டாயா?” — இப்படிக் கேட்டான் ஸ்பெயின் நாட்டு மன்னன் ஐந்தாம் சார்லஸ்.

“முடியாது! கண்டிப்பாக முடியாது! எனக்குச் சரியென்று தெரிந்தவைகளை என் நெஞ்சினின்றும் நீக்க, முடியவே முடியாது! ஏனென்றால் என் மனச்சாட்சிக்கு விரோதமாக நான் நடக்க முடியாது!” — இப்படிப் பதில் கூறினான் மார்ட்டின் லூதர்!

அரசன் ஐந்தாம் சார்லஸின் கண்களில் தீப்பொறி தெறித்தது! ‘பெருஞ்சிங்கம் அறைய வீழும் யானைபோல்’ பொருமினான் மன்னன்! ஆனால் அவனால் லூதரை ஒன்றும் செய்ய இயலவில்லை; ஏனென்றால் ‘ஒரு தீங்குமின்றி திருப்பியனுப்புகிறேன்’ என்ற வாக்குறுதியோடு, தன் அவைக்கு அழைத்திருந்தான் லூதரை! இப்போது லூதர் வொர்ம்ஸ் நகரிலிருந்து தன் இருப்பிடமான விட்டன்பர்க் (Wittenberg) நகருக்குத் திரும்பிக்கொண்டிருந்தான் எந்த விதபயமுமின்றி.

சோலைகளினூடே செல்லும் நல்லதொரு சாலை; அந்தச் சாலையிலே நடந்துகொண்டிருக்கிறான் லூதர்; அப்போது மாலை நேரமாதலால் கதிரவனின் பொன்னொளி பக்கத்திலுள்ள மலைக் குன்றுகளிலும் பாறைகளிலும் பட்டுச் சிதறி இலைகளின் மஞ்சள்நிறம் எங்கும் படர்ந்து கிடக்கின்றது; குஞ்சுக்கு இரைதேட நெடுந்தூரம் பறந்து சென்ற பறவையினங்கள் கூட்டை நோக்கி விரைகின்றன; மலைக்காட்டில் மறைந்து வாழும் ஓநாய்கள் ஓலமிடத் தொடங்கிவிட்டன; பிணம் பிடுங்கும் நரிகளின் ஊளை நாற்புறமும் எதிரொலிக்கிறது; தனது கடைசி ‘ஒளி மூச்சு’க்களையும் விட்டுவிட்டு மறைந்துவிட்டான் செங்கதிரோன்; ‘இருள் அரக்கி’ தனது கோரதாண்டவத்தை ஆரம்பித்துவிட்டாள்! அத்தாண்டவத்திற்கு எதிரிலே நட்மாடத் துணிவற்ற ‘நிலாமங்கை’ வெளிக்காட்டவேயில்லை தனது ஒளிமுகத்தை!

திடீரென மரங்களின் மறைவிலிருந்து குதிரைகள் பாய்ந்தன!

“மார்ட்டின் லூதர்! அப்புறம் இப்புறம் ஓரடியும் எடுத்துவைக்கக்கூடாது! எதிர்த்துப் பேசக்கூடாது! ஏன் என்று கேட்கக்கூடாது! ஏறு குதிரைமேல்!”

நிமிர்ந்து நோக்கினான் லூதர்; அரசனது குதிரை வீரர்களென அறிந்துகொண்டான்; நீட்டப்பட்ட ஈட்டிகள் நெஞ்சிலே பாய்வதற்குத் தயாராயிருந்தன! பளபளக்கும் பட்டாக் கத்திகள் பழிவாங்கத் துடிதுடித்தன! வேறு வழியில்லை; குதிரைமேல் ஏறினான் லூதர்; அதோடு அவனைச் சேர்த்துப் பிணைத்தார்கள் வீரர்கள், பின், தட்டிவிடப்பட்டக் குதிரைகள் சிட்டாய்ப் பறந்தன, மார்ட்டின் லூதரை அவர்கள் எங்கோ கொண்டு சென்றார்கள்; வஞ்சகர் விரித்த வலையில் வீழ்ந்துவிட்டான் லூதர்...! இது நடந்தது 1521-ம் ஆண்டில்.

* * *

மார்ட்டின் லூதர்!......மதத்தின் பெயரால் ஏற்பட்ட குருட்டு நம்பிக்கைகளை மக்கள் மனதினின்றும் விரட்டிய மாவீரன்! கடவுளின் பெயரால் ஏற்பட்ட கயமைகளைக் களைந்தெறியப் பாடுபட்ட கர்மவீரன்! — அவன் 1483-ம் ஆண்டிலே தெற்கு ஜெர்மனியிலுள்ள ஒரு சிற்றூரில் ஏழைக் குடியானவனொருவனுக்குப் பிள்ளையாகப் பிறந்தவன்; அவனது தந்தை ஹான்ஸ், (Hans) ஒரு முழுநேர உழைப்பாளி; இருந்தாலும் லூதரைப் படிக்கவைத்து ஒரு வழக்கறிஞராக்க வேண்டுமெனப் பெரிதும் விரும்பினான். அதற்காக சிறு வயதிலேயே லூதரைப் பள்ளிக்கனுப்பிப் படிக்க வைத்தான். பள்ளி ஆசிரியரிடம் லூதர் வாங்கிய அடிகள் கொஞ்சநஞ்சமல்ல; அவன் பிற்காலத்தில் குழந்தைகளிடம் மிகவும் அன்புடன் பழகியதற்கு அதுதான் காரணமாயிருக்க வேண்டும் என ஐயப்பட்டவர்கள் அதிகம். “ஒரு சிறு சொல்லுக்காக நான் ஒருநாள் காலையில் மட்டும் பதினைந்து முறை பிரம்படிபட்டிருக்கிறேன்” என்று லூதரே ஓரிடத்தில் எழுதுகிறான்.

பின் லூதர், நகரப் பள்ளியொன்றில் சேர்க்கப்பட்டான். அவனுக்கு இசையில் மிக்க விருப்பமுண்டு; அதுமட்டுமின்றி அவனிடம் இனிய குரலுமிருந்ததால் அவன் தெருத்தெருவாகப் பாட்டுப் பாடிக்கொண்டே சுற்ற ஆரம்பித்துவிட்டான். அதன் மூலம் அவனுக்கு ஓரளவு வருவாயும் கிடைத்தது! பிறகு கல்லூரியில் சேர்ந்த லூதர் 1505-ம் ஆண்டில் பட்டம் பெற்று வெளியேறினான்.

* * *

லூதரின் தந்தை ஹான்சுக்கு ஆத்திரம் அளவுக்கு மீறியது! அவனது நண்பர்களுக்கு ஆச்சரியம் எல்லை கடந்தது! — லூதர், அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக ஒரு துறவியாக மாறிவிட்டான்! பகல் இரவு என்று பாராது முழுநாளிட்டுப் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்துவிட்டான்! மதத்தின் பிறப்பிடம், கடவுளின் இருப்பிடமென்று அப்போது கருதப்பட்ட ரோமா புரிக்குச் செல்வதற்குத் துடியாய்த் துடித்தான்! அங்கிருந்த போப்பாண்டவர், மத குருமார்களைக் கண்டு நேரில் பேசும் நேரத்தை எதிர்பார்த்து ஏங்கினான்!

தன் மகன் ஒரு நீதிபதியாக வேண்டுமென்றெண்ணிய தந்தையாருக்கு இவையெல்லாம் பெரும் வருத்தத்தையுண்டாக்கியது. இருந்தாலும் என்ன செய்வது; லூதர் விட்டன்பர்க் மாதாகோவிலிலே

(12-ம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பெருமாளும் நேபாள அனுமாரும்!

"பிச்சை எடுத்தாராம் பெருமாள்! அதனைப் பறித்தாராம் அனுமார்!" என்றோர் பழமொழி உலவுகிறது வைதீகர்கள் வட்டாரத்தில்.

அந்தப் பழமொழியை நிஜமொழியாக்கும் முறையிலே செயலாற்றியிருக்கிறார்கள் இந்திய ஆட்சியாளர்கள் இந்த வாரம்!

சென்ற ஐந்தாண்டுக்காலமாக எதற்கெடுத்தாலும் பணமில்லை என்கிற பல்லவியைப் பாடிவருகிறார்கள் இந்திய ஆட்சியாளர்கள்.

மாகாண ஆட்சியாளர்கள் எந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குப் பணம் கேட்டாலும், அதுமட்டும்தானே கிடையாது என்று கையை விரித்திருக்கிறார்கள் அவர்கள்.

வெளிநாடுகளிலிருந்து இன்னமும் அதிகமாக உணவுப் பொருளை இறக்குமதி செய்ய வேண்டாமா? — செய்யத்தான் வேண்டும். ஆனால் பணமில்லையே எங்களிடம்!

தென்னிந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டுமா—வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை, ஆனால் பணத்திற்கு எங்கே போவது?

புதிய புதிய தொழில்களை இந்தியாவில் துவக்கி இந்தியத் தொழில் வளத்தைச் செழுமையுறச்செய்யவேண்டாமா-ஆமாம் செய்ய வேண்டியதுதான, ஆனால் செய்வதற்குப் பணம்?

இப்படித்தான் பேசிவந்தனர் இந்திய சர்க்கார். சென்ற ஐந்து ஆண்டுகளாக.

பல புதிய தொழில் திட்டங்களை நிறைவேற்றவும், அணைக்கட்டுகளை உருவாக்கவும், நீர்ப்பாசன வசதிகளைச் செய்யவும், இரும்பு முதலிய கனிப்பொருள்களைத் தோண்டி எடுத்துத் தொழில் புரியவும் தேவைப்படுகிறது என்கிற காரணத்தைக் காட்டி, அமெரிக்க ஆட்சியாளர்களின் ஆதிக்கத்தில் உள்ள உலக பாங்கியிலிருந்து பல கோடி ரூபாய்களைக் கடன் வாங்கியிருக்கிறார்கள் இந்திய ஆட்சியாளர்கள்.

இவ்வாறாகத் தங்களுடைய சொந்த நாட்டின் வாழ்க்கையை வளமாக்குவதற்குக் கூடப் பணமில்லாமல் பிறருடைய கைகளை எதிர்பார்த்து ஏங்கிக் கிடக்கும் இந்திய ஆட்சியாளர்கள், இந்த வாரம் மேற்கொண்டுள்ள ஒரு நடவடிக்கையைக் காணும்போது, நமக்குச், சிரிப்பு தாங்க முடியவில்லை.

இமயமலைச் சாரலில் இருக்கிற நேபாளம் என்றோர் சிறு நாடு, அந்த நாட்டிற்கு, இந்திய சர்க்கார், **பதினைந்து கோடி ரூபாய்** கடனாகத் தர இசைந்திருக்கிறார்கள், இந்த வாரம்!

எப்படி இருக்கிறது தேசிய சர்க்காரின் இந்தத் திருக்கூத்து!

இவர்களோ ஓயாமல் கடன் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் உலக பாங்கிலிருந்து! உள் நாட்டுச் செலவுகளுக்கோ ஒத்தைப் பைசாவும் கிடையாதென்று அடிக்கடி கையை விரித்து விடுகிறார்கள்! இந்த நிலையில், நேபாளத்துக்குத் தரப்போகிறார்களாம் பதினைந்து கோடி!

உலக பாங்கியிலிருந்து அரும்பாடுபட்டு வாங்கிய கடனை இப்படியா வீணுக்கு இறைக்க வேண்டும் இந்திய ஆட்சியாளர்கள்?

நம் செலவுக்குப் போகப் பணம் மிச்சமாக இருந்தால் அல்லவா நேபாளத்திற்கோ வேறு எந்த நாட்டிற்கோ நாம் கொடுத்து உதவ வேண்டும்?

ஆனால் இப்போதோ நம் நிலைமையே மிக நெருக்கடியாக இருக்கிறது.

இந்நிலையில் பதினைந்து கோடியை, துணிந்து, ஒரு சின்னஞ்சிறு நாட்டிடம் ஒப்படைப்பது தவறு. தவறுமட்டுமல்ல, மன்னிக்க முடியாத குற்றம்.

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிறார்களே, இது நியாயமா என்று கேட்க நினைக்கிறீர்களா?

கேட்டுவிடாதீர்கள்-உடனே உங்களுக்குத் தேசத்துரோகி என்கிற பட்டத்தைச் சூட்டிவிடுவார்கள் காங்கிரஸ் கண்ணியவான்கள்!!

நியாயத்தைக் கூறினால் அதற்குப் பெயர் தேசத்துரோகமா என்று கேட்கிறீர்களா?

ஆமாம்—அப்படித்தான் கூறுகிறது காங்கிரஸ் அகராதி!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த கோரக்பூர் என்னும் ஊரில் உள்ள ரயில்வே தொழிலாளர்கள், தங்களுடைய மேலதிகாரியின் திமிரான நடத்தையை எதிர்த்து சென்ற வாரம் வேலை நிறுத்தம் தொடங்கினர்.

அவர்கள் மீதும் அந்த ராஜ்யத்துக் காங்கிரஸ் அதிகார வர்க்கம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, இரண்டு தொழிலாளர்கள் மரணமடைய வேண்டிய நிலையை உருவாக்கி விட்டனர்.

திருவாங்கூர்—கொச்சி

உத்தரப் பிரதேசம்

ஆகிய இரண்டு ராஜ்யங்களிலும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் தேசியத் தீரர்கள் தான். அஹிம்சை அஹிம்சை என்று வாய் ஓயாமல் பேசுபவர்கள் தான். சத்தியமூர்த்தி காந்தியடிகளின் சிஷ்யகோடிகள் தாங்கள் தான் என்று பெருமை பேசிக்கொள்ளும் புண்ணியவான்கள் தான்.

ஆம்! அந்த அஹிம்சா மூர்த்திகள் தான் இப்படி இரண்டு இடங்களிலும் சர்வ தாராளமாகத் துப்பாக்கியைப் பேச விட்டிருக்கின்றனர்.

நாகரிக ஆட்சிக்கு அடையாளமல்ல இந்தக் காரியம்.

ஆனாலும் இந்தக் காரியத்தைப் புரிந்திருக்கின்றனர் தேசியத் திலகங்கள்.

தொழிலாளர்கள் கேட்டதோ வாழ்வு.

ஆனால் இவர்கள் அவர்களுக்குத் தந்திருப்பதோ சாவு.

நியாயமா இது? நேர்மையா? தேசிய வாதிகளே, பதில் கூறுங்கள்.

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஆலோசகர் யோசனை"யைக் கைவிட்டுவிட இருக்கிறதாம்.

திருவாங்கூர் — கொச்சிக்கு ஆலோசகராக நியமிக்கப்பட இருந்த திரு. பி. கே. கோஷல் என்பவரை நேபாள நாட்டுக்கு இந்தியாவின் தூதராக அனுப்பத் தீர்மானித்துவிட்டதாம் டில்லி ஆதிக்கப்பீடம்.

ஆம்! டில்லியின் ஆதிபத்யம் தோற்றிருக்கிறது — திருவாங்கூர் கொச்சி வெற்றிபெற்றிருக்கிறது.

இதே உண்மையை இன்னொரு வகையாகக் கூறுவதானால், வடநாட்டு ஆதிக்கத்தைக் கேரள கீதம் தலைகுனியவைத்துவிட்டது என்று கூறலாம்.

வடநாட்டு ஆதிபத்யத்தை எதிர்த்து, அந்த ஆதிபத்யத்தின் கட்டளையை எதிர்த்து, அந்தக் கட்டளையின் கொடுங்கோன்மையை எதிர்த்து, முன்பே, கன்னடநாடு போர்க்கொடி உயர்த்திற்று. இப்போதோ கேரளநாடு புரட்சிக்குரல் எழுப்பியிருக்கிறது.

"மலையாளநாடு மனம் ஒப்பிற்று, கன்னடநாடு காது கொடுத்துவிட்டதா, வடநாட்டு எதிர்ப்புணர்ச்சி அங்கெல்லாம் இல்லாத போது தமிழ்நாட்டில்மட்டும் இருந்தென்ன லாபம்; எப்படிக் கிடைக்கும் உங்களுடைய திராவிடம்." என்று கேட்கிறார்களே சில மாஜி தமிழரசுகள், அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறோம் இந்த இரண்டு செய்திகளையும்.

கன்னடகீதம்—முன்பு!
கேரள கீதம்—இப்போது!

வடநாட்டு ஆதிபத்யத்தை எதிர்க்கத் தொடங்கிவிட்டன கன்னடநாடும் கேரளப்பகுதியும்.

இந்த எதிர்ப்புணர்ச்சி நாளுக்கு நாள் வளரும் — நிச்சயமாக வளரும்—திராவிடநாடு திராவிடருக்கே என்கிற இலட்சிய கீதம் அங்கெல்லாம் எதிரொலிக்கிற வரையில் வளரும் —அல்ல அல்ல, திராவிடத் தனியரசு உருவாகும் இன்பநாள் வரை வளரும். சில ஞானிகளின் கேலியை அலட்சியம் செய்துவிட்டு, சின்ன அண்ணாமலைகளின் சலசலப்பைப் புன்சிரிப்பால் ஒதுக்கிவிட்டு, ராஜாஜிகளின் சாணக்கியத்தைத் தான் தூளாக்கிவிட்டு, காமராஜர்களின் சூழ்ச்சிகளைச் சுக்கு நூறாக்கிவிட்டு வளரும்.

கேரளமும், கன்னடமும், தமிழகமும், ஆந்திரமும், ஒரே குரலில், ஒரே சமயத்தில், ஒரே வேகத்தில்; திராவிடநாடு திராவிடருக்கே என்கிற இலட்சிய கீதத்தை இசைக்கும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

ஆம்! அந்த உண்மையை விளக்கும் அரியதோர் நிகழ்ச்சிதான், இன்று கேரளம், டில்லியை எதிர்த்து வெற்றிபெற்றுள்ள இன்பக் காட்சி!

வாழ்க இத்தகு கேரள கீதங்கள்! வளர்க இந்த ஏகாதிபத்ய எதிர்ப்புணர்ச்சி!


சிறந்த

## சிந்தனைக் கருவூலங்கள்!

### இராதாமணாளன்

| | | |
|---|---|---|
| மனப்புயல் | 2 | 0 |
| மூடுபனி | 1 | 0 |
| பாலைவனம் | 0 | 10 |
| இன்பக் கனவு | 0 | 8 |
| பேசும் பிணம் | 0 | 8 |
| துளிதேன் | 0 | 8 |
| மயானத்தில் முத்தம் | 0 | 8 |
| கந்தலீலா | 0 | 8 |
| மதம் அவசியமா | 0 | 3 |
| அய்யோ கடவுளே | 0 | 3 |

### இளஞ்செழியன்

| | | |
|---|---|---|
| இந்திய அரசியல் திட்டம் | 2 | 0 |
| சரிந்த சாம்ராஜ்யம் | 0 | 10 |

### அன்பழகன்

| | | |
|---|---|---|
| அழகுராணி | 1 | 4 |
| வகுப்புரிமைப் போராட்டம் | 1 | 12 |

### கருணாநிதி

| | | |
|---|---|---|
| தூக்குமேடை | 1 | 8 |
| சுழல் விளக்கு | 1 | 0 |
| களத்தில் கருணாநிதி | 1 | 0 |
| பெருமூச்சு | 1 | 0 |
| வாழமுடியாதவர்கள் | 0 | 12 |
| கருணாநிதியின் வர்ணனைகள் | 0 | 10 |
| இதயவேரிகை | 0 | 8 |
| இனமுழக்கம் | 0 | 8 |
| உணர்ச்சிமாலை | 0 | 8 |
| துடிக்கும் இளமை | 0 | 6 |
| போர் முழக்கம் | 0 | 4 |
| கலைக் களஞ்சியம் கருணாநிதி | 0 | 4 |

பகுத்தறிவுப் பாசறை
131, பிராட்வே, சென்னை-1.


Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers. 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)